Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-25 08-05-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 79



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.


உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்

T.P: 024-222 4247 (சி-11901)

## பொதுக்கட்டமைப்பு விவகாரம்

# சனாதிபதியின் நேர்மைத்தனத்தில் பெரும் சந்தேகம் கொண்டுள்ளோம்!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

**தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும் சனாதிபதியின் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நோக்கத்தின் நேர்மைத்தனத்தில்பலத்த சந்தேகம் கொண்டுள்ளோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று ரொய்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் தெரிவித்துள்ளார்.**

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில்; விடுதலைப்புலிகளிற்கும் அரசிற்கும் இடையிலான மூன்றுவருட போர் நிறுத்த காலத்தில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் கொழும்பு அதன் இயல்பு நிலையை ஏற்படுத்தல் என்ற வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியும் இயல்பு நிலையை ஆபத்துக்குள்ளாக்கியுமுள்ளது.சுனாமியால் அழிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை எதிர்த்து கொழும்பில் ஜாதிக ஹெல உறுமய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உத்தேச பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிகஹெல உறுமய நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியுள்ளது.

நேற்று மாலை 4.00 மணியளவில் கொழும்பு பௌத்த சம்மேளனத்திற்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் பொரளைச் சந்தியைச் சென்றடைந்து அங்கு எதிர்ப்புக் கூட்டமொன்றும் நடத்தப்பட்டது. இதேவேளை பொதுக் கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி எதிர்வரும் பத்தாம் திகதி கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றினை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது தெரிந்ததே.

## ரஷ்யாவிற்கான பி.பி.சி நிருபரிடம் நீர் கொழும்பில் கொள்ளை

(கொழும்பு)

ரஷ்யாவிற்கான பி.பி.சி நிருபர் ஒருவரிடம் நீர் கொழும்பில் வைத்து ஐந்து இலட்சம் ரூபாய் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. பொருட்கள் கொள்வனவு செய்துவிட்டு அவர் தங்கி இருந்த நீர் கொழும்பு ஹோட்டலுக்கு திரும்பி வந்து ஹோட்டல் முன்பாக நின்று கொண்டிருந்த பொழுது இனந்தெரியாத நபர்கள் காரில் வந்து அவர் கழுத்தில் தொங்கவிட்டிருந்த பையை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

இந்தப் பையில் ஐந்து லட்சம் பணமும், கடவுச் சீட்டும் இதில் இருந்துள்ளதாக ரஷ்யாவிற்கான பி.பிசி நிருபர் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக நீர் கொழும்புப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## எனது அழைப்பை வேண்டுமென்றே ரணில் நிராகரித்தது வருந்தத்தக்கது

### -சனாதிபதி சந்திரிகா மீண்டும் கடிதம்





(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவிற்கு தான் அனுப்பிய அழைப்பை அவர் வேண்டுமென்றே தவிர்த்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்று சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதிய மற்றுமொரு கடிதத்திலேயே சனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க நினைப்பது போல் பொதுக் கட்டமைப்பு சமாதான முயற்சிகளில் ஒரு பகுதி அல்ல வடகிழக்கிலுள்ள பல்வேறு சமூகங்களையும், பல்வேறு குழுக்களையும் உள்ளடக்கிய சுனாமி நிவாரணம் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான முகாமைத்துவ அலகு மட்டுமே எனவும் அவர் மேலும் அக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலிகளுடன் உத்தேச பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றிற்கு எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரும்படி சனாதிபதி சந்திரிகாவினால் விடுக்கப்பட்ட அழைப்பை எதிர்க்கட்சித் தலைவர் நிராகரித்துள்ளார். இவரது நிலைப்பாடு குறித்து பதில் கடிதம் நேற்று முன்தினம் சனாதிபதிக்கு அனுப்பப்பட்டது. அக்கடிதத்தில் சமாதான முயற்சிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாணவக் குழுக்களுக்கிடையில் களனி பல்கலையில் மோதல்!

### -மூன்று மாணவர்கள் காயம்

களனி பல்கலைக்கழகத்தில் இரு மாணவக் குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் மூன்று மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த மோதலில் கடுங்காயங்களுக்கு இலக்கான ஒரு மாணவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளான். ஈருருளி சங்கிலி, பொல்லுகள் சகிதம் நேற்று முன்தினம் பிற்பகல் பல்கலைக் கழகத்திற்குள் பிரவேசித்த மாணவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மி.சபை ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிந்தது

சிறிலங்கா மின்சாரசபை ஊழியர்கள் தங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

மின்சாரசபையை மறுசீரமைக்க அமைச்சரவை அங்கீகாரமளித்த அறிக்கையை வாபஸ் பெறுவதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்ததையடுத்தே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.. நேற்றுக் காலை அலரி மாளிகையில் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த உத்தர வாதமளிக்கப்பட்டுள்ளது.

காலை 11 மணிக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அரசாங்கத்தரப்பினருக்கும், சிறிலங்கா மின்சாரசபை தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே சந்திப்பொன்று நடைபெற்றது. இச் சந்திப்பில் அரசாங்கத்தின் சார்பில் நிதியமைச்சர் சரத் அமுனுகம,

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹெரோயின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சிறைக் கைதியைப் பார்க்கச் சென்றவரிடம் ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரைப் பார்ப்பதற்காக குருநாகலைச் சேர்ந்த ஒருவர் கைதிக்கு தின் பண்டங்களும் மற்றும் பற்பசையும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு நிறுவப்படாதுவிடின் உதவிநிதி இரண்டாகப் பிரிக்கப்படும்!

### இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை உரிய காலத்திற்குள் சிறிலங்கா அரசாங்கம் நிறுவத் தவறுமேயானால் உதவித்தொகையை இரண்டாகப் பிரித்து வழங்குவதற்கு உதவி வழங்கும் முக்கிய நாடுகள் பரிசீலித்து வருவதாகக் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்ப அமைக்கப்படவிருக்கும் உத்தேச பொதுக்கட்டமைப்பிற்கு சிறிலங்கா அரசாங்கம் உரிய காலத்திற்குள் கையெழுத்திடப்படாதுவிடின் இலங்கைக்கு ஒதுக்கப்படும் நிதி வடக்கு கிழக் கிற்கு வேறாகவும் தெற்கிற்கு வேறாகவும், பிரித்து வழங்கப்படும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உதவி வழங்கும் நாடுகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

இ-1542, நரசிங்கன் கோயிலடி, இரத்தினபுரம்,கிளிநொச்சி. உரிமையாளர்-வீ.இராசம்மா. மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். (6098)

### 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசாயனவியல் - புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

### தவறிவிட்டது

எனது ஒரு தொகைப்பணம் (சொப்பின்பையில்) கட்டியபடி 05.05.2005 அன்று முகமாலைக்கும், பரந்தன் சந்திக்குமிடையில் தவற விடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் பணிமனையில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்: ஜீ.ஜீவகுமார், மரக்கறி வாணிபம், பொதுச்சந்தை, கிளிநொச்சி. (சி.11868)

### தவறிவிட்டது

அருமைநாதன் நித்தியமலர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 565091719V, பயண அனுமதி அட்டையுடன் வேறு பொருட்களும் முகமாலைக்கும், பளைக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (6102)


# மாமனிதர் சிவராமின் படுகொலை மூலம் பத்திரிகையாளரின் சுதந்திரமின்மை அம்பலம்

**-வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம்**

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் சிவராமின் படுகொலை சர்வதேச நாடுகளின் கண்களைத் திறந்து இலங்கையில் உள்ள பத்திரிகையாளர்கள் அனுபவித்து வருவதாகக் கூறப்படும் எழுத்து, பேச்சு ஒன்று கூடல், நடமாடும் சுதந்திரம் ஆகியவற்றின் வாய்மையற்ற தன்மையை அம்பலப்படுத்துகின்றது என வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் சிவராம் படுகொலையைக் கண்டித்து ஊடகவியலாளர்கள் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சிறிலங்கா சனாதிபதிக்கு சமர்ப்பித்த மகஜரிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அண்மையில் நடந்து முடிந்த தர்மரத்தினம் சிவராமின் கடத்தல், சித்திரவதை, படுகொலை என்பன இனம் தெரியாத எதிர் செயல்களைக் கைங்கரியமாகக் கொண்டவர்களின் கைவரிசையே ஆகும். சனநாயகத்தின் புனிதத்தைப் பேணும் பாராளுமன்றத்திற்கு அருகில் அதுவும் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் அவரது உடல் போடப்பட்டது. இதுவே எங்களை பேரதிர்ச்சிக்கும் பெருங்கலகத்துக்கும் இட்டுச்சென்றுள்ளது. இச்செயல் சுதந்திரத்தை விரும்புகின்றவர்களுக்கும் சனநாயக விழுமியங்களுக்கும் ஒரு சவாலாகவே அமைந்துள்ளது என நாம் கருதுகிறோம்.

ஊடகவியாலாளர் ரிச்சட் டி சொய்ஷாவில் இருந்து ஆரம்பித்து, எங்களது முன்னாள் செயலாளர் மயில்வாகனம் நிமலராஜன், அனுபவம் மிக்க வீரகேசரி பத்திரிகையாளர் ஜி.நடேசன் என்று தொடர்ந்து இன்று பலரது மதிப்பிற்குப் பாத்திரமான தர்மரத்தினம் சிவராம் (தராகி) அவர்களில் இக்கொலைக் கலாசாரம் வந்து நிற்கிறது. இது இப்படியே தொடருமானால் பண்டு தொட்டு அருமையாகப் போற்றி பேணப்பட்ட சனநாயக விழுமியங்கள் உலகளாவிய மனித உரிமைகள் பாதிக்கப்படுவதோடு ஒரு ஊடகவியலாளனின் சுய பாதுகாப்பிற்கே அச்சுறுத்தலும் ஏற்படுத்தி விடும். இக்கொடூரமான குற்றச் செயல் எங்களது அழகிய இலங்கைத் தீவின் ஊடகவியலாளர்களையும் ஏனைய சர்வதேச ஊடகவியலாளர்களையும் திகைத்து மலைக்கச் செய்துள்ளது.

எங்களது தொடர்ந்த அவதானிப்புக்களின் படி இக்கொலை கலாசாரம் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை நோக்கியே, அதுவும் சிறப்பாக தமிழ் ஊடகவியலாளர்களை நோக்கியே செயற்படுகிறது என எண்ணத் தோன்றுகிறது. சிவராம் அவர்கள் அரசியல் சூழ்ச்சிகளையும் குத்துக் கரணங்களையும் அம்பலப் படுத்தி சிறுபான்மையினரின் நீதியான போராட்டங்களை வீர நிலைப்படுத்தி அவர் கீழ்த்தரமான கபட நாடகங்கள் ஆடும் அரசியல் வாதிகளின் முகத்திரைகளை கிழித்தெறிந்து உலக அரங்கில் ஒளி வீசும் ஊடகவியலாளராக விளங்கினார்.

இவருடைய பேனாவின் ஒவ்வொரு நகர்வும் தீர்க்க தரிசனங்களையும் கிழக்கில் நடக்கும் அரசியல் குளறுபடிகளையும் வெளிப்படுத்தியது என்பதே நிதர்சனம்.

எனவே தங்களது முழுக் கவனத்தையும் இதன்பால் செலுத்தி குற்றவாளிகளை உடனடியாக இனம் கண்டு நீதி வழங்குமாறு ஊடகவியலாளர்களாகிய நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் எங்களையும் எங்கள் நாட்டின் நற்பெயரையும் பாதுகாத்து நற்தீர்வை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(41,28,33,சு)

# சனசமூக நிலையத்திற்கு சூரிய மின்கலம் அன்பளிப்பு

(நமதுநிருபர்)

கிளி.உருத்திரபுரம் சனசமுக நிலையத்திற்கு சூரிய மின்கலம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதுடன், அங்கு மரம் நாட்டும் நிகழ்வும் இடம் பெற்றுள்ளது.

அண்மையில் இடம் பெற்ற இந் நிகழ்வுக்கு திருமதி. நாகலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) தலைமை தாங்கினார்.

கிளிநொச்சி பொருண்மிய மதியுரையகத்தினரால் இந்த சூரிய மின்கலம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இந்த சூரிய மின்கல அன்பளிப்பினால் இப்பகுதி வாசகர்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

# படைப்பாளிகளுக்கிடையிலான கருத்துப்பரிமாற்ற கருத்தூட்டல்

கலை, இலக்கியப் படைப்பாளிகளுக்கிடையிலான கருத்துப் பரிமாற்றத்திற்கான கருத்தூட்டல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தூட்டல் போர்க்கால கலை, இலக்கிய வெளிப்பாடுகள் என்ற தலைப்பில் க.வே பாலகுமாரன், பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து இது பற்றிய கருத்துப் பரிமாறலும் நடைபெறும். எழுகலை இலக்கியப் பேரவையினர் இதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளனர். கலை இலக்கிய ஆர்வலர்களை இதில் கலந்துகொள்ளுமாறு எழுகலை இலக்கிய பேரவையினர் கேட்டுள்ளனர்.

# ரொக்கப்பணம் நன்கொடை

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் முல்லை.மேற்கு தெங்கு பனம் பொருள் உற்பத்தி அபிவிருத்தி சங்க தொழிலாளிகளுக்கு ரொக்கப் பணம் நன்கொடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வானது நேற்று முன்தினம் முள்ளியவளையில் அமைந்துள்ள தெ.ப.பொ.உ.அ கூட்டுறவு சங்கமண்டபத்தில் சங்க தலைவர் மா.ஜெயமோகன் தலைமையில் இடம் பெற்றுள்ளது. தொழிலாளிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 5000 ரூபா ரொக்கப் பணமாக மொத்தம் ஆறு இலட்சத்தி 90 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. (ஆ)

# தேசியவாதக் கட்சிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

ஊடகவியலாளர்களைப் புலிகள் என்றும், பயங்கரவாதிகள் என்றும் வர்ணிக்கும் ஜே.வி.பி உள்ளிட்ட தேசியவாதக் கட்சிகளின் செயற்பாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கையின் முக்கிய ஊடக அமைப்புக்கள் சில தீர்மானித்திருக்கின்றன.

ஊடகவியலாளர்களைக் கொச்சைப்படுத்துவதுடன், அவர்களுடைய தொழில் கௌரவத்தையும், பாதுகாப்பையும் பாதிப்படையச் செய்யும் இத்தகைய நடவடிக்கைகள் சட்டத்துக்கு முரணானவை என்று தெரிவிக்கும் இந்த அமைப்புக்கள், இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் வகையில், சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளன.

சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் ஊடகவியலாளர் ஒன்றியம், பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் ஆகியன இணைந்து இந்த நடவடிக்கையை எடுப்பதற்குத் தீர்மானித்துள்ளன.

இதேவேளை ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை தொடர்பான விசாரணைகளைத் துரிதப் படுத்தி, கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்க வேண்டும் என்று இந்த அமைப்புக்கள் சனாதிபதி சந்திரிகாவிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

# தவறவிடப்பட்ட நகை கண்டெடுத்து ஒப்படைப்பு

கிளிநொச்சியிலுள்ள அலுவலகம் ஒன்றில் தவறவிடப்பட்ட ஒன்றரைப்பவுண் நகை அங்கு பணிபுரியும் பெண் ஊழியர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அலுவலகத்தில் பணிபுரியும் பெண் ஒருவரது கைச் சங்கிலி இவ்வாறு தவறவிடப்பட்டிருந்தது. இதனைக் கண்டெடுத்த அங்கு பணிபுரியும் மற்றொரு பெண் அதனை உரியவரிடம் ஒப்படைத்துள்ளார். கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. நகையினைக் கண்டெடுத்து ஒப்படைத்த பெண்ணைக் குறிப்பிட்ட நிறுவன நிர்வாகத்தினர் பாராட்டியுள்ளனர்.

# கால்நடைகளைக் கட்டுப்படுத்துக; த.பொ.மே.நிறுவனம் அறிவிப்பு

(உடையார்கட்டு)

சிறுபோகப் பயிர்ச்செய்கையின் போது பயிர்ச்செய்கைக்கு இடையூறு ஏற்படாது கால் நடைகளைக் கட்டுப்படுத்துமாறு விசுவமடு தமிழீழ பொருண்மிய மேம்பட்டு நிறுவன இணைப்பாளர் கார்த்திக் கேட்டுள்ளார். கால் நடை உரிமையாளர்கள் சிறுபோக பயிர்ச்செய் கைக்காக 01.05.05முதல் கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டுமென அண்மையில் இப்பிரதேசத்தில் நடைபெற்ற ஒன்று கூடலில் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதென இணைப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (19)


**முகாமைத்துவக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் AAT கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**தகைமைகள்:-** க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆறு சித்திகள்
அல்லது
க.பொ.த (உ.த) பரீட்சையில் இரு சித்திகள்

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் முகாமைத்துவக் கல்லூரியில் தொடர்பு கொள்ளவும்.

மேற்கூறப்பட்ட தகைமையுடையோர்கள் தங்களது விண்ணப்பங்களை 20.05.2005 முன்னதாக முகாமைத்துவக்கல்லூரி, கரடிப்போக்குச்சந்தி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

குறிப்பு:-
விரிவுரைகள் யாவும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும்.

நிர்வாகம்:
முகாமைத்துவக்கல்லூரி,
கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

(சி.11847)


# வள்ளுவர்புரம் கிராம அபிவிருத்தி குறித்து யு.என்.டி.பி தேவைப்பகுப்பாய்வு

(உடையார்கட்டு)

வள்ளுவர்புரம் கிராம அபிவிருத்தி தொடர்பாக யு.என்.டி.பி தேவைப்பகுப்பாய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

கிராம சேவை அலுவலர் த.ஜெயதாஸ் தலைமையில் கடந்த மூன்றாம் திகதி இந்த நிகழ்வு இடம் பெற்றது.

யு.என்.டி.பி திட்ட அலுவலர் ச.தேவதாஸ்,திட்ட பொறியியலாளர் யோ.தயாபரன் ஆகியோர் இதில் கலந்துகொண்டு தேவைகள் குறித்து ஆய்வு செய்தனர்.

வீதிகள் புனரமைப்பு, பொதுக் கிணறு அமைப்பு, பொது மண்டபம் அமைப்பு, வீடுகள் அமைப்பு, மலசல கூடங்கள் அமைப்பு, முன்பள்ளி அமைப்பு ஆகியன குறித்து இத்தேவைப் பகுப்பாய்வின் போது ஆராயப்பட்டுள்ளது. (19)

# உடையார்கட்டு ம.வி.யில் பொதுமக்கள் சிரமதானம்


(உடையார்கட்டு)

உடையார்கட்டு மகாவித்தியாலயம் பகுதியினை பொதுமக்கள் சிரமதானம் மூலம் சீர் செய்துள்ளனர்.

சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை இச்சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் தமது கல்விச்செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்வதற்கு வசதியாகப் பொது மக்களால் இச்சிரமதானப் பணி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (19)

## தீவிரவாதிகள் காலக்கெடு



ஈராக்கில் மறுசீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வந்த அவுஸ்திரேலிய பொறியியலாளரை தீவிரவாதிகள் கடந்த வாரம் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர். பின்னர் அவரின் படத்தை தீவிரவாதிகள் தொலைக்காட்சியில் காட்டினார்கள். இப்போது மீண்டும் அந்த பணயக் கைதியின் படத்தை அல் ஜசீரா தொலைக் காட்சியில் தீவிரவாதிகள் ஒளிபரப்பிருக்கிறார்கள். இதில், என் உயிரைக் காப்பாற்ற அவுஸ்திரேலியத் துருப்புக்கள் ஈராக்கில் இருந்து வெளியேற வேண்டும். என டக்ளஸ் உட் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். ஈராக்கில் இருந்து அவுஸ்திரேலிய துருப்புக்கள் வெளியேற 72 மணி நேரம் கெடு விதித்து இருப்பதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

# ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் வீழ்ந்த நாள் இன்று முதல் கொண்டாடுகிறது மொஸ்கோ

## உலகத் தலைவர்கள் பலர் பங்கேற்பு

(மொஸ்கோ)

**ஜேர்மனியை சோவியத் யூனியன் வெற்றி கொண்ட விழா ரஷ்யாவில் இன்று தொடக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந் நிகழ்வில் அமெரிக்க சனாதிபதி புஷ் ஐ.நா செயலாளர் கொபிஅனான் உட்பட 60 நாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.**

இரண்டாவது உலகப் போரில் நாஜிக்களின் ஜேர்மனியை அப்போதைய சோவியத் யூனியன் தோற்கடித்து வெற்றிபெற்றது. அந்த வெற்றியின் 60ஆவது ஆண்டு விழா தற்போதைய ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இன்று முதல் மூன்று நாட்கள் நடக்கிறது. ஜேர்மனி சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜி படைகள் சரண் அடைந்த நாள் மே எட்டாம் திகதியாகும். இந்த மூன்று நாள் விழாவில் பல உலகத் தலைவர்கள் ஒன்று கூடுகின்றனர்.

இதில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், ஐ.நா சபை பொதுச் செயலாளர் கொபிஅனான், சீனப் பிரதமர் ஹு ஜிண்டோ, பிரான்சு சனாதிபதி ஜக்ஸ்சிராக், ஜேர்மனி அதிபர் ஜெரால்டு ஷிரோபர், இத்தாலி பிரதமர் சில்வியோ உட்பட 60 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

அவர்கள் ஜேர்மனியுடன் நடந்த போரில் உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் நினைவுச் சின்னங்களில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவதுடன், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.


நாளை மொஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் ரஷ்ய முப்படைகளின் பிரமாண்ட அணி வகுப்பு நடக்கவுள்ளது. அதை ரஷ்ய அதிபர் புட்டின் உட்பட 60 நாட்டுத் தலைவர்கள் பார்வையிடவுள்ளனர்.



போப்பாண்டவர் பெனடிக்றை தென் ஆபிரிக்க அதிபர் தாபே மெபெகி சந்தித்து கைவினை பொருளைப் பரிசளித்தார்.

## பல கோடி ரூபா பெறுமதி வாய்ந்த ஏவுகணைகளை பாக்.வாங்குகிறது

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ரூ.1656 கோடிக்கு நவீன ஏவுகணைகளை வழங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் 40 ஏவுகணைகள், விமானத்தில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள். இவை இலக்குகளை குறி தவறாமல் தாக்கும் ஆற்றல் உள்ளவை. இவை தவிர கப்பலில் இருந்து பறந்து சென்று எதிரி கப்பல்களைதகர்க்கும் ஹர்பூன்ரக ஏவுகணைகளையும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா விற்க முடிவு செய்துள்ளது. இது போன்ற 20 ஏவுகணைகள் பாகிஸ்தானுக்கு விநியோகிக்கப்படும் எனவும் இதற்கான ஒப்புதல் அமெரிக்க பாராளுமன்றத்தில் விரைவில் பெறப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



நேற்று ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கண்மையில் நடைபெற்ற கார்க்குண்டுத் தாக்குதலினால் ஏற்பட்ட தீயை அணைக்க விரையும் தீயணைப்புப் படையினரையும், சம்பவ இடத்தை அவதானிக்கும் ஈராக்கியப் படையினரையும் படங்களில் காணலாம். (சம்பவத்தில் நான்கு வெளி நாட்டவர் உட்பட 17 பேர் பலியானதாகத் தெரிய வருகின்றது)

## சிரியா மீதான பொருளாதாரத் தடை அமெரிக்காவால் தொடர்ந்தும் நீடிப்பு

(வோஷிங்டன்)

சிரியா மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்கா மேலும் நீடித்துள்ளது.

லெபனானின் சில பகுதிகளைத் தொடர்ந்து ஆக்கிரமிப்புச் செய்திருப்பதாலும், ஈராக்கில் நடக்கும் தீவிரவாத செயலுக்கு உதவி வருவதாலும், சிரியா மீது கடந்த ஆண்டு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது. சிரியாவின் போக்கில் எந்த மாற்றமும் காணப்படாததால் அந் நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்க அதிபர் புஷ் கடந்த வியாழன் நீட்டித்து உத்தரவிட்டார்.

இதன் மூலம் சிரியாவுக்கு எந்த விமானமும் இயக்கப்பட மாட்டாது. அதே போல் சிரியாவில் இருந்து எந்த விமானமும் அமெரிக்காவுக்குள் அனுமதிக்கப்படமாட்டாது. அத்துடன் அந் நாட்டுடனான அனைத்து வங்கித் தொடர்புகளையும் அமெரிக்கா துண்டித்துள்ளது.

## மைக்கேல் ஜாக்சனுக்கு ஆதரவாக எலிசபெத் டெய்லர் சாட்சியம்




(நியூயோர்க்)

சிறுவனுடன் பாலியல் உறவு என்ற சர்ச்சையில் சிக்கியுள்ள பிரபல அமெரிக்கப் பாடகர் மைக்கேல் ஜாக்சனுக்கு ஆதரவாக முதுபெரும் நடிகை எலிசபெத் டெய்லர் சாட்சியமளிக்கவுள்ளார்.

பிரபல அமெரிக்கப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் 13 வயதுச் சிறுவனுடன் பாலியல் உறவு கொண்டதாகவும், சிறுவனுக்கு மது கொடுத்ததாகவும், சாந்தா மரியா நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கில் அரச தரப்புச் சாட்சிகள் விசாரணை முடிந்து விட்டது புகார் கூறிய சிறுவனும் சாட்சியம் அளித்தான். சிறுவனின் தாயாரும், ஜாக்சனுக்கு எதிராகத் சாட்சியம் அளித்தார். இதை அடுத்து எதிர்த் தரப்புச் சாட்சியங்கள் விசாரணை தொடங்கியுள்ளது. இதில் கொலிவூட்டின் பெரும் நடிகை எலிசபெத் டெய்லர் சாட்சியாகத் சேர்க்கப் பட்டுள்ளார். அவர் மைக்கேல் ஜாக்சனுக்கு ஆதரவாக நீதிமன்றில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறார்.

இதேவேளை பிரபல நடனக் கலைஞர் வேட்ராப்சனும் நீதிமன்றில் ஆஜராகி ஜாக்சனுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்தார். அவர் கூறும் போது நான் சிறுவனாக இருந்த போது 20 முறை ஜாக்சன் வீட்டில் தங்கியிருக்கின்றேன். அவர் காம வெறி பிடித்தவர் அல்ல. ஒரு தடவை கூட அவர் என்னிடம் தவறாக நடந்து கொண்டதில்லை என்று அவர் கூறினார்.



ஐரோப்பிய நாடுகளிற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் லத்வேனியாவில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது அந் நாட்டு அதிபருடன் காணப்படுகிறார்.

## அமெரிக்க- கூட்டுப் படைகள் தாக்குதல் ஆப்கானில் 40 தீவிரவாதிகள் பலி


ஆப்கானிஸ்தானில் அமெரிக்கக் கூட்டணிப் படைகளுக்கு எதிரான மோதலில் 40 தீவிரவாதிகள் பலியானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காபூல் மாநிலத்தின் திச்சோபான் மாவட்டத்தில் இந்தத் தாக்குதல் செவ்வாய்க்கிழமை நடந்ததாகவும், இந்தத் தாக்குதலில் 20 பேர் மட்டுமே இறந்ததாக முன்னதாகச் செய்திகள் வெளியாயின.

இறந்தவர்களில் தலிபான் ஆதரவாளர்களும், தீவிரவாதிகளும் அடங்குவர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இதனிடையே தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் ஆப்கானிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் பலியாகினர்.

## இந்து பரிஷத் தலைவர் நேபாளத்தில் சுட்டுக்கொலை

நேபாளத்தைச் சேர்ந்த விஸ்வ இந்து பரிஷத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேபாள தலைநகர் காத்மண்டுவில் இருந்து 300 கி.மீ தொலைவில் உள்ளது புட்வால். இங்குள்ள ராம் நகர் கல்லூரியில் நேற்று யாக பூசை நடந்தது. இந்தப் பூசையில் நேபாள விஸ்வ இந்து பரிஷத் தலைவர் நாராயண் பிரசாத் கலந்து கொண்டார். திடீரென அங்கு நுழைந்த தீவிரவாதிகள் சிலர், நாராயண் பிரசாத்தைச் சுட்டுக் கொன்று விட்டுத் தப்பிச் சென்று விட்டனர். இந்தத் தாக்குதலில் நாராயண் பிரசாத்தின் உதவியாளர் படுகாயமடைந்தார். இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு எந்தத் தீவிரவாத அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.



வடகொரியாவின் அணு உற்பத்தி விவகாரம் தொடர்பாக தாமதிக்காது பேச்சு நடத்த வேண்டும் என ஆசிய ஐரோப்பியத் தலைவர்கள் கோரியுள்ள நிலையில் யப்பானிய வெளியுறவு அமைச்சர் நெபுட்டகாவும் சீன வெளி நாட்டமைச்சர் ஷாவோ ஷிங்கும் ஜப்பானில் சந்தித்த போது.

## ரூபா 80 கோடி மோசடி ரஷ்ய அமைச்சர் கைது

ரஷ்யாவில் 1998 முதல் 2001 ஆண்டு வரை எரிசக்திதுறை அமைச்சராக இருந்தவர் நிதி மோசடி செய்தார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு அமெரிக்காவின் பென்சில் வெனியாவில் தனது பங்குதாரருடன் சேர்ந்து ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார். அப்போது அமெரிக்கா, ரஷ்யாவின் பாதுகாப்புத் துறைக்கு வழங்கிய ரூ. 80 கோடியை இவர் மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த நிலையில் முன்னாள் அமைச்சர் சுவிட்சர்லாந்து சென்றார்.இந் நிலையில் அவரை கைது செய்யும்படி அமெரிக்கா கேட்டுக் கொண்டது. இதன் பேரில் சுவிஸ் பொலிசார்அவரைக் கைது செய்துள்ளனர்.

# விடுதலைப் போராட்டத்தின் மாபெரும் வெற்றிகள்

# ஜெயந்தன் படையணிக்கும் உரித்துடையதாகும்

## -ஆண்டு நிறைவு நிகழ்வில் சோ.தங்கன்



(மட்டக்களப்பு)

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மாபெரும் வெற்றிகளைத் தேடித்தந்த பெரும் மதிப்புடைய படையணியாக ஜெயந்தன் படையணி திகழ்கின்றது என்று அரசியல்துறைத்துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் ஜெயந்தன் படையணினரின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவில் அவர் கலந்து கொண்டபோது மேலும் தெரிவிக்கையில்;

இப்படையணியின் உரு வாக்கத்தின் நோக்கத்தை எமது தேசியத்தலைவர் தமது ஆசிச்செய்தியிலே மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார். அத்தோடு இந்தப்படையணி வடக்கு கிழக்கில் ஒரு தனிப்பெருமையான படையணி என்றும் கூறினார்.

இப்படையணி சிங்களப்படைகளுக்கு நிகரான சவாலை விடுக்கின்ற பெரும் படையணியாக விளங்கி அது தனது 12 ஆவது வருட பூர்த்தியினை நிறைவு செய்யும் இந்நேரம் 13 வருடத்தை எதிர்கொண்டு நிற்கின்றது.

இப்படையணி எமது தாயகத்திற்குப் பெருமை சேர்த்த படையணி இது இன்று தனது வாழ்வில் பெரியதோர் வரலாற்றைப் படைத்துச் செல்லும் ஒன்றாகத் திகழ்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மாபெரும் வெற்றிகளைத் தேடித்தந்த பெரும் மதிப்புடைய படையணியாக இன்று திகழ்கின்றது எனறால் இது மிகையாகாது.

இந்தப்படையணியில் உள்ளத்து உறுதியோடு போராட்டத்திற்குவழிகாட்டிய தளபதிகளும், போராடிய போராளிகளும் பாராட்டப்படவேண்டியவர்கள், தலைவர் காட்டிய வழியைப் பின்பற்றி தமது இலட்சியத்துக்காக 1234 வேங்கைகள் இம் மண்ணில் பெரும் வரலாற்று நாயகர்களாக விதைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஜெயந்தன் படையணி எதிரியின் சிரசை சிதைத்து இன்றும் வெற்றிதேடும் படையணியாகத் திகழ்ந்து வருகின்றது.

எனவே இந்தப்படையணி என்றும் எதிலும் தனது பணியினை முன்னெடுத்து தனது வெற்றியை நிலைநாட்டும் என்றும் அசையாத நம்பிக்கை எமக்குண்டு. இந்தப்படையணி தன்னை மேலும் வலுப்படுத்தி இந்தச் சமாதான காலத்தில் முன்னெடுப்புடன் திகழவேண்டும். சமாதானக் கொள்கைகளை முன்வைத்திருந்த போதிலும் ஜெயந்தன்படையணி உறுதியுடன் இருப்பதைக்காணக் கூடியதாகவுள்ளது என்றார்.

இந்தப்படையணியின் சிறப்புக்களை மேலும் வலுப்படுத்தி அனைவரும் ஒன்றிணைந்து எமது தேசியத்தலைவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி முடிக்கவேண்டிய காலமாக இப்போதைய சூழ்நிலை உள்ளது.

அன்று யுத்தத்தின் காலம் எப்படியிருந்ததோ அதுபோல இன்று இந்தத் தமிழீழ போராட்டத்தின் வெற்றியைப் புகட்ட வேண்டும் என்ற சிந்தனையோடு உள்ளோம். இன்று அரசியலில் யுத்தம் நடந்துகொண்டுள்ளது எனவே இவ்வாறான சமாதானச் சூழ்நிலையிலே ஏற்படுகின்ற பிரச்சினைகளைச் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்க வேண்டிய நல்ல சூழ்நிலையை எங்களது தலைவர் இன்று தோற்றுவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் எமது தலைவர் அவர்கள் யுத்த சூழ்நிலையில் எப்படி உழைத்தாரோ அதுபோல சமாதான காலப பகுதியான இன்றும் இரவு பகல் பாராது உழைக்கின்றார். அந்த வகையில் இன்று சிங்களப் பேரினவாதம் சூழ்ச்சிகரமான சிந்தனையிலுள்ளது. அது தமிழீழத்தில் அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த வேளையில் சிங்களப் பேரினவாதத்தின் உண்மை வடிவினை உலக நாடுகள் நன்கு உணர்ந்திருக்கின்றன. எமது போராட்டத்தின் உண்மையையும் உணர்ந்துள்ளன. சிங்கள பேரினவாத சக்திகளால் யுத்தங்களும், கெடுபிடிகளும் தமிழ்மக்கள் மீது திணிக்கப்படுகின்றன என்பதையும் சர்வதேச நாடுகள் நன்கு அறிந்துள்ளன என்றார்.

# ஏப்ரலில் விசர்நாய்க் கடிக்கு இருபது பேர் சிகிச்சை!

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஏப்ரல் மாதம் 4806 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் கடந்தமாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளபடி வெளிநோயாளர் பிரிவில் 3497பேரும், சாதாரண காய்ச்சலினால் 951பேரும், சிரங்குக்காக102பேரும், குருதிச்சோகையினால் 97பேரும், வயிற்றோட்டத்தினால் 26பேரும், விசர்நாய்க்கடியினால் 20 பேரும், சிகிச்சை பெற்றுள்ளதுடன் 49பேர் சிறுசத்திர சிகிச்சைக்குட்பட்டுள்ளதாகவும் மேற்படி வைத்தியசாலையின் மத்திய மகப்பேற்றுமனையில் கடந்தமாதம் மட்டும் 41 நிறைமாதக் கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு அதில் 23 சிசுப்பிறப்புக்கள் நிகழ்ந்துள்ளதாகவும் மேற்படி நிலவர அறிக்கையில் விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் இடவசதி இன்மையால் சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் அவலப்பட்டுவருவதுடன் சில நோயாளர்கள் முல்லைத்தீவு வைத்தியசாலைக்குச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. (ஆ)

# உலக செஞ்சிலுவைச் சங்க தினம் கிளி, முல்லையில் அனுஷ்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

உலக செஞ்சிலுவைச் சங்க தினம் இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் கொண்டாடப்படவுள்ளது.

கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க தலைவர் இ. கார்த்திகேசு தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பிலும், குமுழமுனையிலும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க முல்லைத்தீவுக்கிளையினால் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

புதுக்குடியிருப்பில் காலை 10.30 மணியளவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் அதிபர் பி.கே சிவலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றது. இதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுக் கிளை மாவட்ட உபதலைவர் கே. மகாலிங்கம் புதுக்குடியிருப்பு பிரிவுத் தலைவர் பி. பரமலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

குமுழமுனைப் பகுதியில் இவ்வாறான நிகழ்வு சிறப்புற இடம்பெற்றுள்ளது. (08,சோ)

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் உற்சவக் கலந்துரையாடல்

(முல்லை)

வற்றாப்பளை கண்ணகை அம்மன ஆலய வருடாந்த பொங்கல் உற்சவதிற்கான கலந்துரையாடல் கடந்த செவ்வாயன்று முல்லை.மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

கலந்துரையாடலில் அடியார்களின் நன்மை கருதி வீதிப்புனரமைப்பு, சுத்தமான நீர் விநியோகம், மலசல கூட தற்காலிக அமைப்பு, மருத்துவ, போக்குவரவு வசதி, வர்த்தக நிலையம் அமைத்தல், சுகாதாரம் பேணல் தொடர்பாக ஆராயப்பட்டது.

அத்துடன் இது தொடர்பாக மற்றொரு கலந்துரையாடல் ஆலய பரிபாலன சபையினரின் ஒழுங்கு படுத்தலில் இன்று காலை 10.00 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. (20,19)

# கடனடிப்படையில் விவசாயிகளுக்கு உழவு இயந்திரம் வழங்கல்

(மல்லாவி)

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கமக்கார வங்கியூடாக இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் பத்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரணியம் தலைமையில் இடம்பெற்றது. கமக்கார வங்கி மூலம் கடன் அடிப்படையில் மேற்படி விவசாயிகளுக்கு இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் பத்தும் அதன் உதிரிப்பாகங்கள் எனப் பல பொருட்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் கமக்கார அமைப்பினர், கிராம அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (24)

# சுகாதார மேம்பாடு தொடர்பாக புதுக்குடியிருப்பில் கலந்துரையாடல்

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லை. மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் கடந்தவியாழனன்று தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் விக்ரமன் தலைமையில் முல்லை மாவட்ட சுகாதார மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலுக்கு முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வர்த்தகசங்கப் பிரதிநிதிகள். சிகை அலங்காரசங்க பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இங்கு முல்லை மாவட்ட சுகாதார மேம்பாடு தொடர்பான பல விடயங்கள் ஆராயப்பட்டது.

குறிப்பாக சந்தை, வர்த்தக நிலையங்கள், சிகை அலங்கார நிலையங்கள் போன்றவற்றின் கழிவகற்றல் தொடர்பான வழிமுறைகள் ஆராயப்பட்டதுடன், இலையான் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலும் கவனத்தில் கொள்ளப்பட்டது. அத்துடன் பிரதேச சபையால் இறுதிக் கழிவகற்றல் மேற்கொள்ளப்படுவதற்குரிய இடங்களும் விரைவாக விசுவமடு, புதுக்குடியிருப்பு பகுதிகளில் அடையாளப்படுத்தப்படுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் கழிவகற்றல் விடயத்தில் புதுக்குடியிருப்பு, பிரதேச சபையின் அதிகவனமெடுக்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. (19)

# இளையோர் விளையாட்டு மைதான உருவாக்கம் சிறுவர் மனங்களில் உளஆறுதலை ஏற்படுத்தும்

## -மைதான திறப்புவிழாவில் அருட்திரு நேசன் அடிகளார் கருத்து

சுனாமி பாதிப்பால் அச்சமும், துயரமும் நிறைந்த சிறுவர் மனங்களுக்கு உள ஆறுதலை ஏற்படுத்துவதுடன் யுத்தத்தால் சமச்சீர் ஆளுமை வளர்ச்சியை இழந்து போய்விட்ட இந்தப் பிரதேசத்தின் சிறுவர்களின் வளர்ச்சிக்கு இவ்வாறான செயற்பாடுகள் மைதான அமைப்புக்கள் உபகரணம் வழங்கல் விளையாட்டுப்



போட்டிகள் பெரும் பங்களிப்பை வழங்கும் என செம்பியன்பற்று மாமுனை உதவிப்பங்குத்தந்தை அருட்திரு நேசன் அடிகளார் தெரிவித்தார்.

சுனாமிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் தற்காலிக குடியிருப்புக்களிடையே உருவாக்கம் பெற்ற இளையோர் விளையாட்டு மைதானங்களின் அங்குரார்ப்பண நிகழ்வின் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வடமராட்சி கிழக்கு மாமுனையில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற இந்நிகழ்வில் மைதானத்தைச் சிறுவர் பாதுகாப்பு நிதிய சிறுவர் பாதுகாப்பு ஆலோசகர் செல்வி ஏபி கிறாண்ட் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். இளையோர் விளையாட்டு மைதான பெயர் பலகையை சிறுவர் பாதுகாப்பு நிதிய அலுவலர் சுதன் திரைநீக்கம் செய்து வைத்தார். இந்நிகழ்வில் அருட்தந்தை நேசன் அடிகளார், விளையாட்டுத் துறை இணைப்பாளர் இன்பன், வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன், இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலாளர் அனரன் அன்பழகன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இளையோர் விளையாட்டுக் கழக உறுப்பினர் களுக்கான விளையாட்டு உபகரணங்களை இளையோர் செயறபாட்டு நிறுவனப் பணிப்பாளர் விஜி வழங்கினார். புதிய மைதானத்தில் பளைமத்திய கல்லூரி அரும்புகள் பயிலரங்க மாணவர்களின் உதைப்பந்தாட்ட காட்சிப் போட்டி இடம பெற்றது.

இப்போட்டிக்கு வடமராட்சி கிழக்குப் பிரதேச விளையாட்டு உத்தி யோகஸ்தர் முகுந்தன் மத்தியஸ்தம் வகித்தார்.

அடுத்து செம்பியன்பற்று இளையோர் விளையாட்டு மைதானத்தை வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் திறந்து வைக்க இளையோர் விளையாட்டு மைதான பெயர்ப்பலகையை இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலாளர் அன்ரன் அன்பழகன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இளையோர் செயற்பாட்டு நிறுவனம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்துடன் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களான வடமராட்சி கிழக்கில் 17 மைதானங்களையும் , முல்லைத்தீவுப்பிரதேசத்தில் 13 மைதானங்களையும் நிர்மாணித்து வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக குடியிருப்புகளுக்கிடையே இந்த மைதானங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் இக்குடியிருப்புக்களின் 18வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான இளையோர் கழகங்களும் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்படுவதுடன், விளையாட்டுப் பயிற்சிகளுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர். இந்தக்கழகங்களுக்கிடையேயான உதைப்பந்து, கரப்பந்து, வலைப்பந்து, கிரிக்கெட், சுற்றுப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மைதானங்கள் நிரந்தரக் குடியிருப்புக்கள் அமைக்கப படும்போது அக்குடியிருப்புக்களுக் கிடையே நிரந்தரமாக நிறுவப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நுளம்பு வலைகள் விநியோகம்

(மன்னார்)

மன்னார் எழுந்தூர் பகுதியிலுள்ள நூறு வீட்டுத்திட்டத்திலுள்ள மக்களுக்கு மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி சிபார்சின் அடிப்படையில் சோபா நிறுவனம் 250 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளை விநியோகம் செய்துள்ளது. ஒவ்வொரு நுளம்பு வலையின் பெறுமதி 1500 ரூபாய் ஆகும். இப்பகுதியில் கூடுதலாக நுளம்புகள் இருப்பதால் இதனால் இப்பகுதியில் வாழும் மக்கள் மலேரியா ஏற்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (18)

# கலாச்சாரச் சீரழிவைத் தடுக்க கிராம ரீதியாக கலாச்சாரக் குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் கலாச்சாரச் சீரழிவு நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக கிராம ரீதியாக கலாச்சாரக் குழுக்கள் அமைக்கப்படவிருப்பதாகத் தென்மராட்சி கலாச்சாரப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலத்தை விட தற்பொழுது அதிகரித்துவரும் கலாச்சாரத்தைச் சீரழிக்கும் நடவடிக்கையில் இளைஞர் சமூகம் செல்வதை அனுமதிக்க முடியாது. குழுமோதல்கள், இளைஞர்கள் மது அருந்துதல், பெண்களிடம் சேட்டை புரிதல், ஆபாசத்திரைப்படங்கள் பார்த்தல் போன்றவற்றால் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் தற்போது அதிகரித்துள்ளன.

இதனால் சமூகக் கட்டமைப்பு பலவீனம் அடைவதுடன் வளரும் மாணவ தலைமுறையும் இவ் ஆபத்தான கலாச்சாரத்தில் சிக்கும் சூழல் உருவாகியுள்ளது எனவும் தென்மராட்சி கலாச்சாரப் பேரவையினர் தெரிவித்துள்ளனர் . (28)

# ஆலய வழிபாட்டிற்குச் செல்ல படையினர் கட்டுப்பாடு விதிப்பு

(தென்மராட்சி)

யாழ்.தென்மராட்சியில் அதியுயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருக்கும் ஆலயங்களில் விழாக்கள் நடத்தும்போது படையினரின் முன் அனுமதி பெற்றே நடத்த வேண்டும் எனவும் விழாக்காலங்களின்போதும், ஏனைய வழிபாட்டு நேரங்களின்போதும் படையினரின் தடைமுகாம் ஊடாகவே ஆலயங்களுக்குச செல்ல வேண்டும் எனவும் சிறிலங்காப் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

சாவகச்சேரியிலுள்ள இராணுவ அதியுயர்பாதுகாப்பு வலயத்துள் அமைந்திருக்கும் மறுவன்புலோ நீத்தார்புலம் செல்வமுத்துமாரி அம்மன் ஆலயம்,வெள்ளாங்குளம் வீரகத்திப்பிள்ளையார் ஆலயம், நீத்தார்புலம் பெரிய தம்பிரான் ஆலயம் ஆகியவற்றிற்குச் சென்று பொதுமக்கள் வழிபடுவதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனா.

இப்பகுதி மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும், மக்களும் சிறிலங்கா படையினரிடம் விடுத்து வந்த தொடர்ச்சியான கோரிக்கைகளைத் தொடர்ந்தே படையினர் இவ் அனுமதியை வழங்கியுள்ளனர். ஆனாலும் இறுக்கமான கட்டுப்பாடுகளுடனேயே இந்த அனுமதியை வழங்கியுள்ளனர். (33)

# யாழ்-பாஷையூர் படையினர் கடற்றொழிலாளர் மீது தொடர் கெடுபிடி

**பாதுகாப்பு வலயத்தை அகற்ற கடற்றொழிலாளர் கோரிக்கை**

*(யாழ்ப்பாணம்)*

***யாழ்.பாஷையூர் கடற்கரைப்பகுதி இராணுவ அதியுயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதனால் இப்பகுதிக் கடற்றொழிலாளர்களது தொழில் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.***

பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் பகுதியூடாக கடற்றொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் மீது படையினர் கடுமையான சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடற்றொழில் உபகரணங்களைக் கொண்டு செல்லும்போதும் கடலில் பிடிக்கப்படும் கடலுணவுகளைக் கரைக்குக் கொண்டுவரும்போதும் படையினர் கடுமையான கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர்.

இதனால் தாம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் கடற்றொழிலாளர்கள் பாஷையூர் பகுதியிலுள்ள இராணுவ பாதுகாப்பு வலயம் உடன் அகற்றப்படல் வேண்டுமெனவும் கோரியுள்ளனர். (33)

# கடற்றொழிலை மேம்படுத்த கடனுதவித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள கடற்றொழிலாளர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடனுதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் முன்வந்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் பிரதேச ரீதியாகவிருக்கும் 11 கடற்றொழிலாளர் சங்க சமாசங்களூடாக இக்கடனுதவித்திட்டங்களை அமுல் செய்ய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தொழில் மேம்பாட்டை நோக்காகக் கொண்ட இக்கடனுதவித்திட்டத்திற்கு என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட ஸ்தாபனம் 22 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (33)

# கைத்தொழில் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்க நடவடிக்கை

யாழ்.வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் கைத்தொழில் நிறுவனங்களுக்கு கைத்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்படவுள்ளது.இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கென வலிகாமம் வடக்குப் பிரதேசசபையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படிப் பிரதேசசபை எல்லைகளுக்குட்பட்ட கைத்தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் வலி-வடக்குப் பிரதேச சபையினரிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து தமது தொழில் நிறுவனங்களுக்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கைத்தொழில் நிறுவனங்களின் இயக்குநர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# யாழ்.இல் காசநோய் தாக்கத்தால் ஆண்டு தோறும் 300 பேர் பாதிப்பு

**காசநோய் வைத்திய நிபுணர் சி.ஜமுனானந்தன்**

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஆண்டு தோறும் 300 பேர் காசநோய் தாக்கங்களுக்கு இலக்காகி வருவதாக காசநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் காசநோய் பரம்பலானது அதிகரித்து வருகிறது. இதற்கு இந்தியாவிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு மீளக்குடியமரத் திரும்புவோருடைய எண்ணிக்கைகள் அதிகரித்திருக்கின்றமை பிரதான காரணமாகவுள்ளது.

இந்தியா போன்ற நாடுகளில் காசநோய்த்தாக்கம் அதிகம் இருப்பதால் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்புவோரால் காசநோய் காவப்படுகின்றது. இதைவிட காச நோயைத தடுப்பதற்கு ஏற்ற வழிகளை மக்கள் கடைப்பிடிக்காமையும் இதற்குப் பிரதான காரணம் எனத் தெரிவித்த வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தன் கடந்த நான்கு மாத காலத்துள் மட்டும் யாழ்.குடாநாட்டில் 75 பேர் காசநோய்க்கு இலக்காகியுள்ளமையையும சுட்டிக்காட்டியுள்ளார். (33)

# பதினெட்டு வயது நிரம்பாதவர்களுக்கு திருமணப்பதிவை மேற்கொள்ள வேண்டாம்

***–பிரதிப்பதிவாளர் நாயகம் பணிப்புரை***

எந்தவிதமான காரணங்களுக்காவும் 18வயது நிரம்பாதவர்களுக்குத் திருமணப்பதிவினை மேற்கொள்ள வேண்டாம் என வடக்கு கிழக்கு மாகாண பிரதிப்பதிவாளர் நாயகம் த.சதாசிவஐயர் சகல திருமணப்பதிவாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் 18 வயதிற்குட்பட்டோருக்கு சில திருமணப் பதிவாளர்களால் பதிவுத்திருமணம் செய்து வைக்கப்படுவதாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

காதல் திருமணம் செய்துகொள்வோரும், திருமண அனுசரணை கடவுச்சீட்டினைப்பெற்று வெளிநாடுகளுக்கு தம் பிள்ளைகளை அனுப்பமுற்படும் பெற்றோரும் 18 வயதுக்குட்பட்டவர்களுக்குத் திருமணப்பதிவு மேற்கொள்கின்றனர்.

சட்டத்திற்கு முரணான இத் திருமணங்களுக்குச் சில திருமணப் பதிவாளர்கள் துணைபோவதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன, சிலர் மணமக்களது வயதினை அதிகரித்துக்காட்டக்கூடிய போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சில பதிவாளர்களை ஏமாற்றி திருமணப்பதிவுகளை மேற்கொள்கின்றனர்.

இதனால் பலசட்டச்சிக்கல்களும், முறைகேட்டுக் குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

இதுகுறித்து அவதானத்துடன் செயற்படுமாறு திருமணப்பதிவாளர்களுக்கு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (33)

# யாழ்.இல் வீதிவிபத்துக்களைக் கட்டுப்படுத்த முதற்கட்டமாக மாணவர்களுக்கு அறிவுரை

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் வீதிவிபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு முதற்கட்டமாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களிற்கு வீதி ஒழுங்கு சம்பந்தமான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் எனப் பொலிசாருக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

வீதி விபத்துக்கள் சம்பந்தமான கலந்துரையாடல் அரசாங்க அதிபர் கே.கணேஷ் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோது அவர் இந்த உத்தரவை விடுத்தார்.

தனியார் சிற்றூர்தி சேவை சங்கத்தினர், வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் வாகன அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் சம்பந்தமான விடயங்களில் கூடிய கவனம் எடுக்கவேண்டும் எனவும், 18வயதிற்கு உட்பட்டவர்கள் வாகனம் செலுத்தும் விடயத்தில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தப்பட்டதுடன், சமாந்தரமாக வீதியில் ஈருருளிகளில் செல்பவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மீதும் நடவடிக்கையெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மாணவர்களுக்கு முதல் தடவை அறிவுரை கூறுவதாகவும் இரண்டாம் தடவை எச்சரிக்கை செய்வதாகவும், மூன்றாம் தடவை நீதிமன்றம் மூலம் தண்டனைக்கு உட்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (41)

# உதவிகள் வழங்கல்

இந்தியாவிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு மீளக்குடியமரத் திரும்பியுள்ள மக்களுக்கான உதவிகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் வழங்கிவருகிறது. அந்தவகையில் இவ் அகதிகளுக்கு ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினால் சமையற்பாத்திரங்கள், பாய்கள், படுக்கை விரிப்புகள் என்பன வழங்கப் பட்டு வருகின்றன.

# சாலயப்பிட்டி ,முள்ளி கிராமங்களில் புனரமைப்பு வேலைத்திட்ட செயற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

யாழ். மாவட்டத்தின் அரியாலை மத்தியிலும், தெற்கிலும் அமைந்துள்ள சாலயப்பிட்டி, முள்ளி ஆகிய கிராமங்களைப் புனரமைக்கும் வேலைத்திட்டச் செயற்பாடுகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சமுதாய மீள் கட்டமைப்புத் திட்ட அனுசரணையுடன் மேற்கொண்டு வருகின்றது.

பல்வேறு திட்டங்கள் இக்கிராம அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக தொழிற்பயிற்சிகளை வழங்கும் செயற்திட்டங்கள் இம்மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளன பயிற்சிநெறிகளுக்காக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தையல்பயிற்சி-20பயனாளிகள், மின் இணைப்புப் பயிற்சி-10பயனாளிகள், தச்சுவேலைப் பயிற்சி-10பயனாளிகள், பனையோலைப் பயிற்சி-15பயனாளிகள், கயிறு திரித்தல் பயிற்சி-10பயனாளிகள், சாரதிப் பயிற்சி-08பயனாளிகள், சமையல் பயிற்சி-20பயனாளிகள், இப்பயிற்சி நெறிகளோடு மக்களின் சுகாதாரத்தையும், சூழலையும் பேணும் பொருட்டு மலசலகூடங்களை அமைக்கும் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இரண்டு கிராமங்களிலும் மொத்தமாக 35 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் சீரற்ற நிலையில் காணப்பட்ட வீதிகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்திலுள்ள 2500 அடி நீளமான அரசடி வீதி, 1800 அடி நீளமான இளையதம்பி வீதி, 1000 அடி நீளமான யூதமாதா வீதி என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு இச்செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கான அனுமதிகள் கிடைக்கப பெற்றதும் செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்படுமென அரியாலைக்கான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திட்ட இணைப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (கு)

# தொலைபேசி இணைப்பு வழங்க ரெலிகொம் நடவடிக்கை

(மல்லாகம்)

சுன்னாகம் பகுதியைச் சுற்றிலும் ஆறு கிலோ மீற்றர் பிரதேசத்திற்கு தொலைபேசி இணைப்புக்களை வழங்க ரெலிக்கொம் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்று முன்தினம் 250மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்துவதற்கான நிகழ்வுகள் மல்லாகம் பழம்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடபிராந்தியத் தலைவர் யோகேந்திரன் வடபிராந்தியமுகாமையாளர் சரவணபவான் வெளிக்கள உபகரண பரிபாலன இணைப்பாளர் அன்ரனிராஜன் மற்றும் நிதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் கே.சீனிவாசன் உட்பட பல அலுவலர்களும் கலந்து கொண்டனர். (41)

# சிறப்பாக கவனிக்கப்பட வேண்டிய விசேட தேவைக்குட்பட்டோர்

இலங்கையில் கடந்த இருபது வருட காலமாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாக பலர் அங்கங்களை இழப்பது மட்டுமன்றி பொதுமக்களும் அங்கங்களை இழந்துள்ளனர். இவ்வாறான அங்கக் குறைபாட்டினாலும், நோய்த்தாக்கத்தினாலும் , பிறப்பினாலும் பலர் விசேட தேவைக்குட்பட்டவர்களாக மாறியுள்ளனர். இவ்வாறான விசேட தேவைக்குட்பட்டவர்களை விசேடமாக கவனிக்க வேண்டியது மனித நேயமுள்ள ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்

விசேட தேவைக்குட்பட்டவர்கள் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையினால் விசேட தேவைக்குட் பட்டோர் தொடர்பாக கவனம் செலுத் தப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதற்கான பிரகடனம் 1983 ஆம் ஆண்டில் இருந்து 1992 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையால் அமுல்ப்படுத்தப்பட்டு 1992 ஆம் ஆண்டில் இருந்து உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது.

சர்வதேச விசேட தேவைக்குட் பட்டோர் தினம் கொண்டாடப் படுவதன் நோக்கம் விசேட தேவைக் குட்பட்டோருக்கான "சமவாய்ப்பு", "பூரணபங்குபற்றல்" என்பவற்றுடன் அவர்களை சமுதாய வாழ்விலும், அபிவிருத்தியிலும் இணைத்தலாகும்.



சர்வதேச ரீதியாக அங்கீகரிக் கப்பட்டுள்ள இவ்விசேட தேவைக் குட்பட்டவர்கள் வவுனியா மாவட் டத்தில் 1500 பேர்வரையிலுள்ளனர். இங்குள்ள விசேட தேவைக்குட் பட்டோரில் பெருமளவானோர் எமது தாயகத்தின் நாளைய நற்பிரஜைகளான சிறுவர்கள் என்பது வேதனையுடன் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு வவுனியா மாவட் டத்தில் சமுதாயத்தில் தெளிவாக இனங்காணப்படக் கூடியதும் அவசர புனர்வாழ்வு செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாகவும் இருக்கின்ற விசேட தேவைக் குட்பட்டோருக்கான புனர்வாழ்வு செயற்றிட்டங்களினை அரச அமைப் புக்களின் அனுசரணையுடன் ORHAN, SEED, FORUT, FRC, RIPP போன்ற அரசசார்பற்ற அமைப்புக்கள் அமுல்ப்படுத்தி வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வடிவமைக் கப்பட்டு, இலங்கை அரசினால் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள் ளப்பட்டு, இலங்கையின் சமூக சேவைகள் அமைச்சினால் நெறிப் படுத்தப்படுகின்ற ஒரு திட்டமான சமூகம்சார் புனர்வாழ்வுத்திட்டத் தினை SEED, ORHAN ஆகிய நிறுவனங்கள் வவுனியாவில் அமுல்ப் படுத்தி வருகின்றன.

இச்சமூகம்சார் புனர்வாழ்வு செயற்றிட்டமானது விசேட தேவைக குட்பட்டோரின் செயற்பாட்டை சமூக அடிப்படையில் மேற்கொள் வதனை நோக்காகக் கொண்டதாகும அதாவது மருத்துவம், சமூக பொருளாதார புனர்வாழ்வினை விசேட தேவைக்குட்பட்டோர் வாழ் கின்ற சமூகத்தின் பங்களிப்புடன் செயற்படுத்துவதன் மூலம் சமூகம் அவர்களையும் சமூகத்தின் சக அங்கத்தவர்களாக ஏற்று அவர் களுக்கான புனர்வாழ்வு அளிக்கும் பணியினைப் பொறுப்பேற்று சமூக பங்குபற்றல், சமசந்தர்ப்பம் போன்ற உரிமைகளுடன் விசேட தேவைக் குட்பட்டோரை வாழ வைப்பதனை நோக்காகக் கொண்டே சமூகம் சா புனர்வாழ்வுத்திட்டம் செயற்படுத் தப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் ORH 'AN நிறுவனத்தினால் மேற்கொள் ளப்படும் சமூகம் சார் புனர்வாழ்வுத் திட்டமானது வவுனியா, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 42 கிராமங்களில் இருந்து இனங் காணப்பட்ட எண்ணிக்கை கொண்ட சிறுவர்களுக்கான திட்டமாக நடை முறைப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் இவர்களுக்கான கல்வி, மருத்துவ, சமூகபுனர்வாழ்வுச் செயற்பாடுகள் வழங்கப்படுகின் றன. 2005ஆம் ஆண்டில் இச் செயற்றிட்டமானது வவுனியா பிர தேச செயலர் பிரிவிலுள்ள 34 கிராமங்களுக்கும், செட்டிகுளம் பிர தேச செயலர் பிரிவிற்கும் விஸ் தரிப்புச் செய்யப்பட உள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

சமூகம்சார் புனர்வாழ்வுத் திட்டத் தினை வவுனியாவில் மேற்கொண்டு வரும் இன்னோர் நிறுவனமான SEED வவுனியா பிரதேச செயலர் பிரிவிலுள்ள மூன்று கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் இதனைச் செயற்படுத்தி வருகின்றது.

இச்சமூகம் சார் புனர்வாழ்வுச் செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாக கிராமசேவை அலுவலர் பிரிவு மட்டத்தில் சமூக அபிவிருத்திக் குழுக்களும், செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவு தவிர ஏனைய பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் பிரதேச மட்ட பின்புலக்குழுவும், மாவட்ட மட்டத்தில் மாவட்ட மட்டப் பின்புலக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

SEED நிறுவனம் சமூகம் சார் புனர்வாழ்வுத் திட்டத்திற்கு மேல திகமாக விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களுக்காக "வலுவூட்டல் வளாகம்" என்ற பாடசாலையை நடாத்தி வருகின்றது. இப்பாடசாலையின் மூலம் 90 சிறுவர்கள் நன்மை அடைந்து வருகின்றனர். மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்காக ORHAN நிறுவனத்தினால் " புதுவாழ்வு பூங்கா" என்ற பயிற்சி நிலையம் நடாத் தப்படுகின்றது.. இதில் 28 மன வளர்ச்சி குன்றிய சிறுவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர் வவுனியா மாவட்டத்தில் பல்வேறு வகையான விசேட தேவைக்குட்பட்ட ஏறத்தாழ 1500 பேருள்ள போதிலும் வலுவூட்டல் வளாகத்தின் மூலம் 90 சிறுவர் களுக்கும், புதுவாழ்வு பூங்கா மூலம் 28 சிறுவர்களுக்குமே அவர்களுக்குத் தேவையான விசேட தேவைகள் வழங்கப் படுகின்றன. ஏனைய விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய வவுனியா மாவட்டத் திலுள்ள மற்றைய அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும்



ORHAN நிறுவனம் விசேட தேவைக்குட்பட் டோருக்கான சமூகம் சார் புனர்வாழ்வுத் திட்டத்தினைவிட சமூக விழிப்புணர்வு பயிற்சித் திட்டம், பொருளாதார வலுவூட்டல் திட்டம், கல்விஉதவி மருத் துவ உபகரணங் கள் வழங்கல் மேலதிக சிகிச்சைக் கான உதவிகள் வழங்கல் போன்ற உதவி திட்டங்களையும் செயற் படுத்திவருகின்றமை பாராட்டத் தக்கதாகும்.

இவ்விசேட தேவைக்குட்பட்டோர் "அங்கக் குறைவு ஆற்றல் குறைவு அல்ல" என்பதனை நிரூபித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதாவது விசேட தேவைக்குட்பட்டோர் தினத்தில் இவர்களால் வழங்கப்பட்ட கலை நிகழ்வுகள் இவர்களா விசேட தேவைக்குட்பட்டவர்கள்? என பார்வையாளர்கள் கேள்வி கேட்குமளவிற்கு மிகத் திறமையாக இருந்தன. அத்துடன் அன்றைய தினம் விசேட தேவைக்குட்பட்ட இவர்களால் ஆக்கப்பட்ட பொருட் களின் கண்காட்சியும் இடம் பெற்றது. பூரண மனிதன் ஒருவனால் வரைய முடியாத சிறந்த ஓவியங்களை இவர்கள் வரைந்திருந்தனர் இதன் மூலம் அவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடுகளை அவதானிக்க முடிந்ததுடன் ஒரு ஓவியத்திற்கு இருக்க வேண்டிய அனைத்து அம் சங்களையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

வவுனியா மாவட்ட விசேட தேவைக்குட்பட்டோர் அகில இலங்கை ரீதியிலும் தமது சாதனைகளை நிலைநாட்டி உள்ளனர்.2004இல் தேசிய ரீதியில் றோட்டரிக் கழகத் தால் நடாத்தப்பட்ட "சூரியப் பிரகாச"(SUN SHINE) விளையாட்டு போட்டியில் ORHAN நிறுவன அனுசரணையுடன் பங்கு பற்றிய மாணவர்கள் மூன்று தங்கப் பதக்கங்களையும், ஏழு வெள்ளிப் பதக்கங்களையும், நான்கு வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளனர். அத்துடன் SEED நிறுவன அனு சரணையுடன்.

பங்குபற்றிய மாணவர்கள் மூன்று தங்கப்பதக்கங்களையும், 20 வெள்ளிப்பதக்கங்களையும் 23 வெண்கலப்பதக்கங்களையும் வென்று பெரும் சாதனை படைத் துள்ளனர்.

அடுத்து விசேட தேவைக்குட் பட்டோர் தொடர்பாக நாம் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களை நோக்குவோம்விசேட தேவைக்குட்பட்டோரின் தேவைகள் இதுவரை சரியாக இனங்காணப் படவில்லை. இவர்களின்தேவைகளை தெளிவாக இனங்கண்டு வரையறுக்கவேண்டும் இதன் முதற் கட்டமாக விசேடதேவைக் குட்பட் டோர். தொடர்பான சரியான தகவல்கள் பெறப்பட்டுதரவுத்தளம் ஒன்று உருவாக்கப்பட வேண் டும்.விசேட தேவைக்குட்பட்டோர் தொடர்பான சரியான தரவுத்தளம் ஒன்று இல்லாமையால் அவர்களுக் கான புனர்வாழ்வு அளிப்பது சிக் கலாக உள்ளமையால் தரவுத்தளம் ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியமும் அவசரமுமான தொன் றாகும்.

நோயினாலும், பிறப்பினாலும், விபத்துக்களினாலும், யுத்தத்தி னாலும் பாதிக்கப்பட்ட இவர்களை பிரதேசத்திற்கு பிரதேசம் வெவ் வேறு பெயர் கொண்டு அழைக் கின்றனர். அதாவது ஊனமுற்றோர், வலுவிழந்தோர்,மாற்று வலுவுள் ளோர், விசேட தேவைக் குட்பட் டோர் எனப் பல்வேறு பெயர்களால் இவர்கள் அழைக்கப் படுகின்றனர். இந் நிலைமையை தவிர்த்து அவர்களைக் குறிப்பிடும் பொது வான, ஏற்றுக்கொள்ளத்தக்க சொல் ஒன்று அங்கீகரிக்கப்பட்டு அதனையே அனைவரும் பயன் படுத்த தீர்மானிக்க வேண்டும்.

விசேட தேவைக்குட்பட்டோா மாவட்ட மட்டத்தில் அமுல்படுத்தப் படுகின்ற புனர்வாழ்வு செயற்றிட்டங் களில் உரியவகையில் இணைக்கப் படுவதற்கும் அவர்களுக்கான சமூகம்சார் புனர்வாழ்வுத்திட்டம் போன்றவை எல்லோரையும் உரிய வகையில் சென்றடைவதற்கும் நட வடிக்கை எடுக்கப்பட்டு இவர்கள் புனர்வாழ்வு பெறுவதற்கான உரிமை உரியவகையில் வழங்கப்பட வேண்டும்.

மனிதவளத்தின் ஓர் அங்கமாக விசேடதேவைக்குட்பட்டோரையும் கருதவேண்டும். இதன்மூலம் இவர்களையும் சமுதாய முன்னேற் றத்திற்கான மனித வளமாக ஏற்று, இவர்கள் தமது ஆற்றல்களையும், திறமைகளையும் பரிபூரணமாக வெளிப்படுத்துவதற்கும் அதன்மூலம் அவர்களின் அந்தஸ்தை உறுதிப் படுத்திக் கொள்வதற்கும், சமூக செயற்பாடுகளில் அவர்கள் பூரண மாகஇணைந்து செயற்படுவதற்கு மான வாய்ப்புக்கள் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

தற்போது நடைமுறையிலுள்ள விசேட தேவைக்குட்பட்டோரின் முன்னேற்றத்திற்கும்,சமூக தொடர் பிற்கும் தடையாகவுள்ளசட்டங்கள் நீக்கப்படவும், திருத்தப்படவும் நட வடிக்கை எடுக்கப்படவேண்டும் அத் துடன் காலமாற்றத்தைக் கவனத் தில் கொண்டு விசேடதேவைக் குட் பட்டோரின் உரிமை களைப் பாது காப்பதற்கான சட்டங்கள் இயற்றப்

**கண்டாவளையூர் ஆறு சுபாஸ்கரன்**

படுவது மாத்திரமன்றி உரிய வகையில் அமுல்ப்படுத்தப்படு வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.இதன் மூலம் அவர்களின் வாழ்வதற்கானகுடியியல் உரிமை வழங்கப்பட வேண்டும்.

விசேடதேவைக்குட்பட் டோருக்குசெய்ய வேண்டிய தேவை கள் பலஉள்ளன. அவற்றில் சிலவே செய்யப்பட்டுள்ளன. இவர் களை எமதுசகோதரங்களாக கருதி நாமும் எம்மாலான உதவி களைச் செய்யத் திடசங்கற்பம் பூணவேண்டும்.

★ ★ ★ ★

# சுனாமி பாதித்த பகுதிகளில் கடமைபுரியும் தொண்டர்களுக்கு உளவளப் பயிற்சிப்பட்டறை

-நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் முன்னெடுப்பு

சுனாமியால் பாதிப்புற்ற பகுதிகளில் கடமை புரியும் தொண்டர்களுக்கான ஆற்றுப்படுத்தல் மேம்பாட்டுப்பயிற்சி நெறி நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இவ்வாறான பயிற்சி நெறியொன்று முல்லைத்தீவு சிலாவத்தையில் நடைபெற்றது. மேலும் வடமராட்சி கிழக்கிலும் பயிற்சி நெறியை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவையாற்றும் சேவையாளர்களுக்கான உளவளப் பயிற்சிப்பட்டறை கடந்த இரண்டாம்திகதி தொடக்கம் நான்காம் திகதி வரை மூன்றுநாட்கள் சிலாவத்தையில் அமைந்துள்ள நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் உப பணிமனையில் நடைபெற்றது.

இப்பயிற்சிப்பட்டறை யுனிசெப் நிதி ஆதாரத்துடன் நலவாழ்வு அபிவிருத்திநிறுவனம், அருட் சகோதரி கிறிஸ்ரபெல் இளையதம்பி குழுவினரால் நடாத்தப்பட்டது.

# காந்திசேவா சங்க நிலைய மாணவன் அதி விசேட சித்தி பெற்றுள்ளார்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவன் பரமானந்தம் சசிதரன் அறநெறிப்பரீட்சையில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப்பங்களிப்புடன்கூடிய நிர்வாக அனுசரணையின்கீழ் பராமரிக்கப்பட்டுவரும் அகில இலங்கை காந்தி சேவாசங்க (8D உருத்திரபுரம், கிளிநொச்சி) நிலையத்தில் தங்கியிருந்து கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் கல்விகற்கும் பரமானந்தம் சசிதரன் என்ற மாணவன் இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினரால் கடந்த நபம்பரில் இல் நடாத்தப்பட்ட அறநெறிப்பரீட்சையில் நான்கு பாடங்களிலும் (இந்துசமயம், சமயமெய்யியல், சமயஇலக்கியம், சமயவாழ்வியல்) "D" அதிவிசேட சித்தி பெற்றுள்ளார்.

இவரோடு பரீட்சை எழுதிய 48 மாணவர்களில் மேலும் எட்டு மாணவர்கள் நான்கு பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கு)

# மூவர் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

இந்தியா மதுரை மாவட்டம், தடல் நகர் அகதிமுகாமில் வசித்து வந்த இலங்கை தமிழ் அகதிகளில் மூவர் கடந்த திங்கட்கிழமை தலைமன்னார் ஊடாக நாடு திரும்பியுள்ளனர்.

அவர்களை மன்னார் பொலிசார் மன்னார் பதில் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து நீதிபதி அவர்களின் சொந்த இடமான மன்னார் சாவற்கட்டுக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவிட்டார். (18)

# சிறிமாவோவின் உருவப்படம் பாராளுமன்றில் திரைநீக்கம்

(கொழும்பு)

முன்னாள் சிறிலங்கா பிரதமரும், இப்போதைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தாயாருமான சிறிமாவோ பண்டாரநாயகாவின் உருவப் படமொன்று பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் உள்ள சனாதிபதி அலுவலகத்துக்கும், பிரதமர் அலுவலகத்துக்கும் இடைப்பட்ட பரந்த வெளியில் இந்த உருவப்படம் வைக்கப்பட்டுள்ளது.

இந்த உருவப்படத் திரைநீக்கம் செய்யும் நிகழ்வில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் லொக்குபண்டார உட்பட, அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சிறிமாவோ பண்டாரநாயகாவின் உருவப்படத்தை வரைந்த பிரபல ஓவியரான சந்திரகுப்த தேனுவரவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். முற்பகல் 11மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், வழமைபோல சனாதிபதி சந்திரிகா வருகை தருவதற்குத் தாமதமான காரணத்தினால், சுமார் 12 மணிக்கே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

## சிறிலங்காப் பொலிசாருக்கு இந்தியப் பொலிசார் பயிற்சி

(கொழும்பு)

நாட்டில் நடக்கும் பயங்கரவாத செயல்களைத்தடுத்து நிறுத்துவது சம்பந்தமாக சிறிலங்காப் பொலிசாருக்கு விசேட பயிற்சி அளிப்பதற்கு இந்தியப் பொலிஸ் திணைக்களம் உடன்பட்டுள்ளது.

நான்காம்திகதி கொழும்பில் நடந்த சிறிலங்கா-இந்தியா பேச்சுவார்த்தைகளில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சாம்சரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

# பாண்டியன்குளம்-துணுக்காய்ப் பிரதேசங்களில் நியாப்-02 வேலைத்திட்டம் ஆரம்பம்

(மல்லாவி)

பாண்டியன்குளம்-துணுக்காய் பிரதேசங்களில் நியாப் இரண்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நட்டாங்கண்டல் மையக் கிராமம் தெரிவுசெய்யப்பட்டு 75 இலட்சம் ரூபாய் செலவில் அபி விருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான தேவை பகுப்பாய்வுக் கலந்துரையாடல் நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நட்டாங்கண்டல் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ம.ஜெகு தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கருத்துரையை விவசாய போதனாசிரியர் திருமதி பு.சிவபாலன், கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ச.அ.குருஸ், நியாப் திட்ட சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ரட்ணராஜா ஆகியோர் வழங்கினர்.

கிராமத்துக்கு தேவையான பகுப்பாய்வுகளை மேற்கொண்டனர். தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேசத்தின் மையக் கிராமமான அனிஞ்சியன்குளம் பகுதியில் 80 இலட்சம் ரூபா செலவில் நியாப் இரண்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பான தேவை பகுப்பாய்வு கூட்டம் பாண்டியன் குளம் துணுக்காய் அபிவிருத்திக் கழக மண்டபத்தில் கடந்த வியாழனன்று காலை 9.00 மணிக்கு சமூக வலுவூட்டாளர் ஆ.முரளிதரன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் பின்தங்கிய கிராமத்தில் முக்கிய வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது. கருத்துரையை நீர்ப்பாசன பிரதித் திட்டப் பணிப்பாளர் சு.சிவகுமார், பெரும்பாக உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம், கால் நடை வைத்தியர் செல்வி கிரிஜகலா, கிராம சேவையாளர் எ.சண்முகநாதன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.ரவிகரன், நியாப் சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ரட்ணராஜா, விவசாய போதானாசிரியர் பு.சிவபாலன், முல்லை மாவட்ட பொது நிர்வாகசேவை நிர்வாக உத்தியோகத்தர் ஆ.அருளானந்தம் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழகப்பிரதிநிதிகள் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர், இணைப்பாளர்கள், அரச அரசசார்பற்றநிறுவனப் பிரதிநிதிகள், போராளிகள்,பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (24)

# வரலாற்று புகழ்பெற்ற தம்புள்ள கல்லில் பாரிய வெடிப்பு

(கொழும்பு)

வரலாற்று புகழ்பெற்ற தம்புள்ள கல்லில் பாரிய வெடிப்பு ஒன்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்துஅந்த கல்லிலிருந்து 100 சதுர அடி அளவிலான ஒரு பகுதி உடைந்து வீழ்ந்து சிதறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.15 அளவில் பாரிய சத்தத்துடன் இந்த வெடிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கல்லின் உடைந்த பகுதியில் இருந்து தற்சமயம் நீருற்று ஒன்று தோன்றியுள்ளதாகவும் இதற்கு முன்தினம் இதுபோன்ற பல வெடிப்புகள் இந்த கல்லில் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# புளியங்குளம்,நெடுங்கேணி — வைத்தியசாலைகளின் நிலை...?



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புளியங்குளம் பிரதேச வைத்தியசாலை பல குறைபாடுகளின் மத்தியில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியவாறு செயற்பட்டு வருகிறது.

பதினைந்திற்கும்மேற்பட்ட கிராமங்களின் மக்கள் பயன் பெறும் நோக்குடன் இவ் வைத்தியசாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதில் வெளிநோயாளர்பிரிவு ஒன்றும், மகப்பேற்று விடுதி ஒன்றுமேயுள்ளது. இவை இரண்டிலும் சேவைபுரிய வைத்தியசாலை பொறுப்பதிகாரி உட்பட நான்குபேர் மட்டுமேயுள்ளனர். அதிலும் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக ஓய்வு பெற்ற ஒருவரே கடமையாற்றிவருகின்றார்.

அத்துடன் மகப்பேற்றுவிடுதியில் கடமையாற்ற தாதிமார்கள் பற்றாக்குறையாகவுள்ளனர்.ஒருவர் மட்டுமுள்ளதால் அவர் விடுமுறை நாட்களில் செல்லும் வேளை அந்த நாட்களில் வரும் நோயாளர்கள் வேறுவைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அவ்வாறு அனுப்புவதற்கு வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வசதி கூட இல்லை.

இந்த அம்புலன்ஸ் வசதி இல்லாதபட்சத்தில் இரவு வேளைகளில் வருகின்ற நோயாளர்களில் மேலதிகசிகிச்சை பெறவேண்டியவர்களை வேறுவைத்தியசாலைக்கு அனுப்புவது மிகவும் சிரமமாகவேயுள்ளது.

அவ்வாறு வரும் நோயாளர்களில் மிகவும் அவசரமான நோயாளர்களை வேறுவாகனத்தைப் பிடித்து வவுனியா வைத்தியசாலைக்குஅனுப்புகின்றபோது ஓமந்தை சோதனைச் சாவடியில் மிகுந்த சோதனைகளின் மத்தியிலேயே நோயாளர்களை உள்ளேசெல்வதற்கு இராணுவத்தினர் அனுமதிக்கின்றனர்.

ஆகையால் இவ் வைத்தியசாலைக்கு மிகவும் அவசரமாகவும்,அவசியமானதுமாக அம்புலன்ஸ் வண்டி ஒன்று தேவையாகவுள்ளது என வைத்தியசாலை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இவற்றுடன் இவ் வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி மட்டுமுள்ளதால் ஏனைய நோயாளர்களை வைத்து பராமரிப்பது இயலாத காரியமாகவுள்ளது. அவ்வாறு விடுதி கட்டி தருகின்றபோதும் அதற்குரிய வைத்தியர்கள், தாதியர்கள் இல்லாமல்வெறும் கட்டடத்தை கட்டிக்கொடுப்பதில் மட்டும் என்ன பயன் ஏற்படப்போகின்றது?

இதேபோன்று தான் நெடுங்கேணி வைத்தியசாலையின் நிலைப்பாடுமுள்ளது. அங்கு முக்கியமாக நிரந்தர வைத்தியர் ஒருவர் இல்லை. அத்துடன் மூன்று விடுதிகள் கொண்ட அந்த வைத்தியசாலையிலும் மருத்துவ தாதிமார்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.

மகப்பேற்று விடுதியில் ஒரே ஒரு மருத்துவ மாது கடமையாற்றி வருகின்றார். ஆகவே நெடுங்கேணி,புளியங்குளம் ஆகிய இருவைத்தியசாலைகளிலும் மகப்பேற்று விடுதியில் மருத்துவ மாதுக்கள் ஒவ்வொருவர் மட்டுமே இருப்பதனால் இந்த இருவரும் விடுமுறைகளில் செல்கின்றபோது வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதி நோயாளர்கள் அனைவரும் வவுனியாவுக்கோ அல்லது புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கோ செல்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் புளியங்குளம் வைத்தியசாலையில் தொலைபேசிவசதி, நீர் விநியோகம்,மின்சாரவசதி போன்றவை இல்லாது இயங்குவதுடன் மருந்தாளர், பரிசாரகர்,வைத்தியசாலைக் காவலாளி ஏனைய தொழிலாளர்கள் போன்றோர் முற்றாக இல்லை. வெளிநோயாளர் பிரிவில் சிட்டை கொடுப்பவர் தான் மருந்தினையும் வழங்கி வருகின்றார்.

மேலும்,இந்த வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களில் நூற்றிற்குப் பத்து வீதமானோர் உளவியல் ரீதியாக தாக்கம் பெற்றுள்ளார்கள் என்றும், இதிலும் அனேகமானோர் இளம் வயதினராகவே உள்ளனர் என்றும் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இதனால் உளவியல்ரீதியான நடமாடும் மருத்துவ சேவை ஒன்றினை மேற்கொண்டு வரும்போது அந்த நோய்களில் இருந்து மக்களைப் படிப்படியாக விடுவிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே முக்கியமான இடங்களில் புதிய கட்டடங்களை கட்டி வைத்தியசாலைகளைத் திறந்து வைப்பதற்கு அப்பால் அந்த வைத்தியசாலையை நிர்வகிப்பதற்குரிய ஒழுங்குகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்து கொடுக்கவேண்டிய கட்டாய நிலையை கருத்தில் எடுப்பதும் அவசியமாகும். அப்போது தான் அந்த வைத்தியசாலையின்சேவை பெறுமதி மிக்கதாகவும் மக்களின் நோய்களை நிவர்த்தி செய்கின்ற ஒரு வைத்தியசாலையாக மாறும். ஆகவே இவ் வைத்திய சாலை குறைபாடுகளை ஓரளவேனும் நிவர்த்தி செய்து தரும்படி அப்பகுதி மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

த.குகன்

# அரசை உறுதியற்ற தன்மைக்கு ஜே.வி.பி.இட்டுச் செல்கின்றது

## -மு.கா.தலைவர் கவலை

(கொழும்பு)

ஜே.வி.பியினர், சிறிலங்கா அரசாங்கத்தை ஸ்திரமற்றநிலைமைக்கு இட்டுச் செல்வதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூவ் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியில் பங்காளிக் கட்சியான, ஜே.வி.பியினர் அரசாங்கத்திலிருந்து கொண்டே அதனை விமர்சித்துவருதாகவும், அத்துடன் அரசாங்கத்தை ஒரு முடிவெடுக்கவிடாமல் ஸ்திரமற்றநிலைமைக்கு இட்டுச் செல்வதாகவும் ரவூவ் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் காலத்தில், ரவூவ் ஹக்கீமின் ஆட்சியென விமர்சித்து வந்த ஜே.வி.பியினா,தற்பொழுது அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டு அரசாங்கத்தை விமர்சித்துவருவதாக அவர் கூறியுள்ளார். எனினும், தாம் அரசாங்கத்துடன் இருந்த காலத்தில் ஒருபோதும் அரசாங்கத்தை ஸ்திரமற்ற நிலைக்கு இட்டுச்செல்லவில்லையென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூவ் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜே.வி.பி யின் நிலைப்பாட்டால் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவுத் கூறியுள்ளார்.

# புகையிரத சாரதிகள் வேலைநிறுத்தம் முடிவு

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத சாரதிகள் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் வியாழக்கிழமை நள்ளிரவுடன் கைவிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவுடன் வியாழக்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டதாக லொகோமோட்டிவ் ஒபரேட்டிங் இன்ஜினியர்ஸ் சாரதிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.ஏ.வி. கொன்தசேன தெரிவித்தார். புகையிரத சாரதிகளின் பதவிகளில் மாற்றங்களைக் கொண்டு வருவது பற்றி பரிசீலனை செய்வதற்கு குழுவொன்றை நியமிக்க இக்கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. திணைக்கள சட்டதிட்டங்களை ஆராய்ந்து அதில் செய்ய வேண்டிய திருத்தங்கள் என்னென்ன என்பது பற்றி சிபாரிசு செய்வதற்கு ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் குழுவொன்றை நியமிக்கவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. புகையிரத ஊழியர்களின் சம்பளங்கள், புதிய சேவைகள் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும், புகையிரத ஊழியர்களுக்கான ஊக்கக் கொடுப்பனவு திட்டத்திற்கான அனுமதியை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கும் .இக்கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டதையடுத்து புகையிரத சாரதிகள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

# மின்சாரசபையை மறுசீரமைக்கும் சட்டத்தை மீளப்பெறாவிடில் காலவரையறையற்ற போராட்டம்

## மின்சாரசபை தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா மின்சாரசபையை மறுசீரமைப்புச் செய்யும் சட்டத்தை அமைச்சரவை மீளப்பெறாதுவிட்டால் கலாவரைறையற்ற பணிநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக மின்சாரசபை தொழிற்சங்கங் கள் அரசுக்கு கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டமும் இதன் ஓர் அங்கமே என்றும் அவை தெரிவித்துள்ளன.

இவ்வாறான நிலை ஏற்படுமாயின் நாட்டில் மின்சார விநியோகம் சீர்கெடுமென தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் நிமலரத்ன தெரிவித்துள்ளார்.

மின்சாரசபையைக் கலைக்காமல் அது அரச கூட்டுத்தாபனமாக இருக்குமென சந்திரிகா அறிவித்ததால் தற்போது அமைச்சரவை மறுசீரமைப்புக்கு அங்கீகாரம் அளித்துள்ளமை செல்லுபடியாகாது எனத் தெரிவித்துள்ள நிமலரத்ன பிரேரணையை ரத்துச் செய்யாமல் அதனை கூட்டுத்தாபனமாக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தேர்தலொன்றுக்கு தயாராகின்றது

## ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தேர்தல் ஒன்றுக்குத் தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத்தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.

தேர்தலொன்றுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் சிறிலங்கா பொலிஸ் அதிகாரிகள் சிலரை அரசாங்கம் மாற்றிவருவதாகவும்,அவர்களை மாற்றுமாறு சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அரசாங்கம் அழுத்தங்கொடுத்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை , ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தேர்தல் காலத்தில் முன்வைத்த வாக்குறுதிகளை இன்னமும் நிறைவேற்றவில்லையெனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப்பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசியப் பண்டங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 'வற்' வரியை நீக்க நிர்ப்பந்தம்

அத்தியாவசியப் பண்டங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஐந்துவீத பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினை நீக்க நடவடிக்கையெடுக்காவிட்டால் நாடளாவிய ரீதியல் கடைகளை மூடப்போவதாக, அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிறிலங்கா நிதியமைச்சு அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஐந்துவீதம் வரியினை அறவிடுவதாகவும்,

இதனை நீக்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கம் கோரிக்கைவிடுத்துள்ளது.

விற்பனையின் போது விதிக்கப்படும் ஒருவீத வரியினை விலக்களிக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர். அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்தப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் பி.சாமி, இறக்குமதி செய்யும்போது ஏற்கனவே ஐந்து வீதத்தினை சுங்கத்திணைக்களத்திற்கு செலுத்துவதாகவும்,

மீண்டும் ஐந்துவீதத்தினை விற்பனையின்போதும் அறவிடுவது நியாயமற்றதெனவும் தெரிவித்துள்ளார்.

**FORUT** Campaign For DeveLopment & Solidarity

AN ORGANISATION PROMOTING ALCOHOL,DRUG, AND SMOKE FREE ENVIORNMENT

**VACANCY ANNOUNCEMENT: TECHNICAL OFFICER (Civil)**

**FORUT**, an international NGO working in Sri Lanka since 1982, is inviting application from qualified and experienced personnel to work with the poor and affected population to uplift their living status, by adopting participatory working methods. The candidates are expected to be team workers who could work with the project teams to increase the efficiency and effectiveness.

| Minimum Requirement | Main Tasks and Responsibilities |
|---|---|
| • National Diploma in Technology(NDT)-Civil, with five year experience in construction works, or, Qualified in National Certificate in Technology-Civil, with 08Years experience in Construction Works, and, | • Prepare plans, drawings and estimates for construction and renovation works, |
| • Proven skills in English and Tamil are must, Knowledge of Sinhala would be desired | • Prepare documents for tenders, evaluate and give recommendation, |
| • Very good Computer literacy, | • Inspect and supervise project implementation at sites and provide technical guidance and advice to ensure quality and timely execution of projects. |
| • Valid Driving License, at least for Motor bicycle, | • Check quantities in bills submitted by partner organization and attend to certification of same. |
| • Age between 30 to 45 years preferred. | • Prepare procurement plans for infrastructure projects. |
| | • Continuously assess the construction and renovation works to determine whether the results serve the indented purposes. |

**Qualified females are encouraged to apply.** Duration of contract will be one year with possible extensions depending on availability of funds and staff performance. **Only short listed candidates will be called for interview.**

Completed application should be forwarded to reach **Program Manager, FORUT Vanni, 155th mile post, Jaffna-Kandy Road, Kilinochchi** on or before 20.05.2005.

-mail:-arne@forut.lk

(சி11843)

நெஞ்சகலா 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சீவியத்தில் இவரை நேசித்த நாங்கள் இறை சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற எங்கள் ஜெபங்களை காணிக்கையாக்குகின்றோம்.

என்றும் மறவாத:-
அம்மா-மகேஸ்வரி,
சகோதரர்கள்,அம்மப்பா,
அம்மம்மா,சித்திமார்,
மாமாமார்,அத்தைமார், பாஸ்டர்மார்,
ஊழியர்கள், விசுவாசிகள்

சீயோன்மலை,ஜெபவீடு,
10 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு



தங்கராசா தவலோஜன்
தாயின் மடியில் :-21-05.1980
ஆண்டவன் அடியில்:-08.05.2000

(5847)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## முல்லைத்தீவு - முகமாலை

## 10.05.2005 இல் புதிய நேர விரிப்பு

மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்கள், பொதுமக்களின் வேண்டுகைக்கு அமைவாக 10.05.2005 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

### முல்லைத்தீவு - முகமாலை

நேர ஒழுங்கு

| நாயாறு | செம்மலை | குமுழமுனை | முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | விசுவமடு | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுநகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | காலை 05.30 | 06.15 – 06.30 | 07.15 | 07.55 | 08.20 | 08.25 | 08.40 |
| | | | காலை 06.00 | 06.45 – 07.00 | 07.45 | 08.25 | 08.50 | 08.55 | 09.10 |
| | | | காலை 07.00 | 07.45 – 08.00 | 08.45 | 09.25 | 09.50 | 09.55 | 10.10 |
| | | | காலை 07.30 | 08.15 – 08.30 | 09.15 | 09.55 | 10.20 | 10.25 | 10.40 |
| காலை 05.45 | 06.05 | 06.25 | காலை 08.00 | 08.45 – 09.00 | 09.45 | 10.25 | 10.50 | 10.55 | 11.10 |
| | | | காலை 08.30 | 09.15 – 09.30 | 10.15 | 10.55 | 11.20 | 11.25 | 11.40 |
| | | | காலை 09.00 | 09.45 – 10.00 | 10.45 | 11.25 | 11.50 | 11.55 | 12.10 |
| | | | காலை 09.30 | 10.15 – 10.30 | 11.15 | 11.55 | 12.20 | 12.25 | 12.40 |
| | | | காலை 10.00 | 10.45 – 11.00 | 11.45 | 12.25 | 12.50 | 12.55 | 01.10 |
| | | | காலை 10.30 | 11.15 – 11.30 | 12.15 | 12.55 | 01.20 | 01.25 | 01.40 |
| | | | காலை 11.00 | 11.45 – 12.00 | 12.45 | 01.25 | 01.50 | 01.55 | 02.10 |
| | | | காலை 11.30 | 12.15 – 12.30 | 01.15 | 01.55 | 02.20 | 02.25 | 02.40 |
| | | | காலை 12.00 | 12.45 – 01.00 | 01.45 | 02.25 | 02.50 | 02.55 | 03.10 |
| | | | காலை 12.45. | 01.30 – 01.45 | 02.30 | 03.10 | 03.35 | 03.40 | 04.00 |

### முகமாலை - முல்லைத்தீவு

நேர ஒழுங்கு

| முகமாலை | புதுக்காட்டு நகர் | இயக்கச்சி | பரந்தன் | விசுவமடு | புதுக்குடியிருப்பு | முல்லைத்தீவு | குமுழமுனை | செம்மலை | நாயாறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 08.30 | 08.45 | 08.50 | 09.15 | 09.55 | 10.40 – 11.00 | 11.45 | | | |
| காலை 09.00 | 09.15 | 09.20 | 09.45 | 10.25 | 11.10 – 11.30 | 12.15 | | | |
| காலை 09.30 | 09.45 | 09.50 | 10.15 | 10.55 | 11.40 – 12.00 | 12.45 | | | |
| காலை 10.00 | 10.15 | 10.20 | 10.45 | 11.25 | 12.10 – 12.30 | 01.15–02.20 | 03.20 | 03.40 | |
| காலை 10.30 | 10.45 | 10.50 | 11.15 | 11.55 | 12.40 – 01.00 | 01.45 | | | |
| காலை 11.00 | 11.15 | 11.20 | 11.45 | 12.25 | 01.10 – 01.30 | 02.15 | | | |
| காலை 11.30 | 11.45 | 11.50 | 12.15 | 12.55 | 01.40 – 02.00 | 02.45 | | | |
| காலை 12.30 | 12.45 | 12.50 | 01.15 | 01.55 | 02.40 – 03.00 | 03.45–04.00 | 05.00 | 05.20 | 05.40 |
| காலை 01.00 | 01.15 | 01.20 | 01.45 | 02.25 | 03.10 – 03.30 | 04.15 | | | |
| காலை 01.30 | 01.45 | 01.50 | 02.15 | 02.55 | 03.40 – 04.00 | 04.45 | | | |
| காலை 02.15 | 02.30 | 02.35 | 03.00 | 03.40 | 04.25 – 04.45 | 05.30 | | | |
| காலை 03.00 | 03.15 | 03.20 | 03.45 | 04.25 | 05.10 – 05.30 | 06.15 | | | |
| காலை 04.15 | 04.30 | 04.35 | 05.00 | 05.40 | 06.25 – 06.45 | 07.30 | | | |
| காலை 05.30 | 05.45 | 05.50 | 06.15 | 06.55 | 07.40 – 08.00 | 08.45 | | | |

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
முல்லைத்தீவு.

(சி-11848)

# இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்போம்



ஹபிபுல் பஷார்

இம்மாத இறுதியில் இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கவிருப்பதாக பங்களாதேஷ் அணித்தலைவர் ஹபிபுல் பஷார் தெரிவித்துள்ளார்.


இங்கிலாந்தின் வித்தியாசமான காலநிலையும், மைதான அமைப்பும் தமக்குச் சாதகம் இல்லாத போதிலும் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றியை எதிர்பார்க் காதபோதும் இங்கிலாந்து வீரர்களுக்கு அதிர்ச்சியளிக்கும் வகையில் தாம் விளையாடப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பு டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பங்களாதேஷ கடந்த சனவரியில் சிம்பாப்வேயுடனான டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கிலும் கடந்த வருடம் ஒருநாள் போட்டி ஒன்றில் இந்திய அணியையும் வெற்றிகண்டது.

அணித்தலைவர் பஷார், தற்போது அணிவீரர்கள் மனநிலையில் உறுதியாகவிருப்ப தாகவும் உடல் நிலையிலும் பூரண தகுதி பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். பி.பி.சிக்கு அவர் அளித்த செவ்வியில் தமது அணி தற்போதைய திறனுடன் இங்கிலாந்து போன்ற அணி களுடன் இதுவரை பங்குபற்றவில்லை என்று கூறியதுடன், தாம் சிறப்பாக விளையாடி ஒரு போட்டியிலாவது வெல்வது அல்லது தொடரைச் சமன் செய்வது என சபதமிட்டுள்ளார்.

இது தொடர்பாக அணியின் பயிற்றுநர் வட்மோர் தெரிவிக்கும்போது, இந்தச் சுற்றுத் தொடர் தமது வீரர்களுக்கு பாரிய சவாலாக இருக்கும் என்றும் அதனை முறியடிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தமது வீரர்களுடன் ஆடுவதும் கடினமான பணி என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஹர்பஜன் தூஸ்ரா பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது ஐ.சி.சி திணறல்



ஹர்பஜன்சிங்கின் தூஸ்ரா பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியாமல் சர்வதேச கிரிக்கெட்சபை (ஐ.சி.சி.) திண றுகிறது.

இந்திய சுழல் மன்னன் ஹர்பஜன்சிங் பந்து வீச்சு சர்ச்சையில் மாட்டிக் கொள்வது வழக்கம். 1998இல் முதல் முறையாக சிக்கினார். 2004 டிசம்பரில் வங்களா தேசத் துக்கு எதிரான சிட்டகொங் டெஸ்ட் போட்டியின்போது, இவரது தூஸ்ரா (வலது கை துடுப்பாட்ட வீரர் அடிக்க முடியாதபடி பந்து விலகிச் செல்வது) வகை பந்து வீச்சுக் குறித்து சர்ச்சை எழுந்தது. இவ்வாறு பந்து வீசும்போது ஹர்பஜன்சிங் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கும் அதிகமாக கையை வளைப்பதாக நடுவர்கள் குற்றம் தெரிவித்தனர். இதற் காக அவுஸ்திரேலியா அனுப்பப்பட்டார். அங்கு நிபுணர் குழுவின் ஆய்வில் தப்பினார்.

பின்னர் கடந்த மார்ச்சில் பாகிஸ்தானுக்கு எதிரான கொல்கொத்தா டெஸ்டிலும் தூஸ்ரா வகைப்பந்து வீச்சு குறித்து நடுவர்கள் குற்றம் சாட்டினர். இதையடுத்து மூன்று மாதங்களில் இரண்டாவது முறையாக பந்து வீச்சு பிரச்சினையில் சிக்கினார் தவிர சர்வதேச கிரிக்கெட் சபை புதிய விதிமுறைப்படி (15 டிகிரி வரை கையை வளைக்கலாம்.) சர்ச்சையில் சிக்கும் முதல் வீரரானார்.

இந்தமுறையீடு மீது ஐ.சி.சி 21 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். ஆனால் இன்று வரை பந்து வீச்சை ஆய்வு செய்ய குழு எதுவும் அமைக் கப்படவில்லை. இதற்கு ஹர்பஜனுக்குச் சாதகமாக அறிக்கை அமைந்து விடுமோ என்ற அச்சமே காரணம் எனக் கூறப்படுகிறது.

# முழு உடற் தகுதியுடன் முரளி அணிக்குத் திரும்ப நம்பிக்கை



எதிர்வரும் யூலை மாதம் சிறிலங்காவில் சிம்பாப்வே அணியுடன் நடைபெறும் கிரிக் கெட் தொடரில் முரளிதரன் பங்கேற்கும் நம்பிக்கையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது.

கடந்த சில காலமாகத் தோள் பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக இரண்டு முறை அவருக்கு சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் அவர் தற்போது இங்கிலாந்தில் நடைபெறும் கவுண்டிப் போட்டி களில் பங்கேற்று வருகிறார்.

லங்கா சயர் அணிக்காக ஆடும் அவர் வார்சஸ்டசயர் அணியில் எட்டு விக்கெட்டுக்களை வீழ்த்தி வெற்றிக்கு வழிசமைத்தா

இந்தச் சந்தர்ப்பத்தில் உலகில் அதிகூடிய விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள ஷேன் வோர்னின் சாதனையை முறி யடிப்பீர் களா எனக் கேட்டபோது, அது பற்றி சரியாகக் கூற முடியாது எனத் தெரிவித்ததுடன் வோன் பிரபலமிக்கப் பந்து வீச்சாளர் எனவும் இதனை உறுதிப்படுத்திக் கூறமுடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

# அக்தர் நீக்கத்திற்கு ஒழுக்கமின்மையே காரணம்




இன்சமாம்

மே.தீவுகள் தொடருக்கான அணியில் சொகைஅக்தர் நீக்கப்பட்டதற்கு புதிய காரணத்தைக் கூறியுள்ளார் அணித் தலைவர் இன்சமாம்.

பாகிஸ்தான் அணி மே.தீவு சென்று மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட வுள்ளது. இதற்கான அணியில் 'ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ்' சொகை அக்தர் சேர்க்கப்படவில்லை அவர் காயத்திலிருந்து முழுமையாக குணமடையாததே காரணம் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறியுள்ளது. தற்போது வேறு காரணத்தைக் கூறுகிறார் இன்சமாம். இவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது, அக்தரிடம் ஒழுக்கமில்லை. இவரால் பல பிரச்சினைகளை சந்தித்துள்ளோம். பலமுறை நீக்கப்பட்டு பின்னர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆனாலும் அவரது நடவடிக்கையில் எவ்வித மாற்றமும் இல்லை. இது மற்ற இளம் வீரர்களையும் பாதிக்ககூடும் இதனால் தான் மே.தீவு தொடரில் அக்தர் இடம் பெறவில்லை. அக்தர் இல்லாததால் பந்து வீச்சில் பாதிப்பு ஏற்படாது இவ்வாறு இன்சமாம் கூறினார்.

# ஷரபோவாவின் கனவை முறியடித்தார் யஸ்ரின் ஹெனின்



நேற்று முன்தினம் பெர்லினில் நடைபெற்ற ஜெர்மன் ஓபன் டென்னிஸ் காலிறுதிப் போட்டியில் யஸ்ரின் ஹெனின் ஹாடின் ரஷ்யாவின் நட்சத்திரமான மரியா ஷரபோவாவை 6-2,6-4 என்ற செட் கணக்கில் வென்று ஷரபோவாவின் தரவரிசைக் கனவை முறியடித்துள்ளார்.

ஷரபோவா இந்தப் போட்டியில் வெற்றிபெறுவதன் மூலம் தரவரிசையில் லின்சே டெவன் போர்ட்டை பின்தள்ளி முதலாமிடத்தைப் பிடிக்கப்போவதாக அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஆரம்பத்தில் ஷரபோவா நம்பிக்கையுடன் ஆடி ஹெனின் ஹாடனின் சேர்விஸ்களை முறிடியத்தபோதும் ஹெனினை சமாளித்து வெற்றி காணமுடியவில்லை.

யஸ்ரின் பல போட்டிகளில் ஆடிய திறமையும் இரண்டில் வெற்றி கண்ட அனுபவத்துடன் இதில் நம்பிக்கையுடன் போராடி வெற்றி பெற்றுள்ளார்.

# தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் பல்வேறு போட்டிகள்

தமிழீழமாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு யாாழ்.மாவட்ட பாட சாலைகளுக்கிடையேயான விளை யாட்டுப்போட்டிகள் பலவும் நடத்தப் படவுள்ளன.

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டிலான இவ்விளை யாட்டுப்போட்டிகளில் மரதன் ஓட்டம், உதைபந்தாட்டம், வலை பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், சைக்கில் ஓட்டம் போன்ற பல போட்டிகள் நடத்தப் படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தமது விண்ணப்பங்களை தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப் பங்களைச் சமர்ப்பிக் குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# ரோடிக் அதிர்ச்சித் தோல்வி

இத்தாலியன் மாஸ்டர்ஸ் டெண்ணிஸ் தொடரில் அண்டி ரோடிக் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

இத்தாலியில் உள்ள ரோம் நகரில் இத்தொடர் நடக்கிறது. மூன் றாம் சுற்றுப் போட்டிகள் கடந்த வியாழனன்று நடந்தன. இதில் முதல் நிலை வீரரான அமெரிக் காவின் ரோடிக் ஸ்பெயினின் பெர்னாண்டோ வெர்டாஸ்கோவை எதிர்த்து விளையாடினார். இரு வீரர்கள் இடையேயும் கடும் போட்டி நிலவியது. இரண்டு மணி 32 நிமிடங்கள் நடந்த இப்போட்டியில் ரோடிக் 7-6, 6-7, 4-6 என்ற செட்களில்போராடி தோல்வி அடைந்தார்.



நியூ யோர்க்கில் நடந்த குதிரையேற்றப் போட்டியில் மேத்யூ மெக்ரான் என்ற வீரர் வெற்றியை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார். திடீரென்று தடையை தாண்டிய குதிரை தடுமாறி குப்புற விழ, மெக்கரானோடு வெற்றி வாய்ப்பும் சறுக்கி விழுந்தது. இவரை விரட்டி வந்த ராபர்ட் வெற்றி பெற்றார்.

# கோப்பாய் பிரதேசசெயலர் வருடாந்த விளையாட்டு விழா

கோப்பாய் பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் 3.00மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் உதவி பிரதேசசெயலாளர் திருமதி. அ.சாந்தசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக வடகிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் ரி.மாதுளனும் சிறப்பு விருந்தினராக அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் தி.குகநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (41)



நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம் பெற்ற தடகளப் போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழீழ விளை யாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் ரி.மாதுளன் உரை யாற்றுவதையும்,

அருகில் பிரதேச செயலாளர் திருமதி. க.தெய்வேந்திரம் மற்றும் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட தேசிய சேமிப்பு வங்கி திரு நெல்வேலி கிளை முகாமையாளர் சி.என். ஜெனநாதனும் அமர்ந்துள்ளனர்.



# விளையாட்டு

## உடற்பயிற்சிப் போட்டி

முல்லை மாவட்ட பாட சாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப்போட்டி நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் ம.வி விளையாட்டு மைதானத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தைக் கொக்குளாய் அ.த.க பாடசாலை யும், இரண்டாம் இடத்தை புதுக் குடியிருப்பு ஆர்.சி பாடசாலையும், மூன்றாம் இடத்தை பாலிநகர் ம.வி பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத் தைக்கொக்குளாய் அ.த.க பாட சாலையும், இரண்டாம் இடத்தை ஒட்டு சுட்டான் ம. வி, மூன்றாம் இடத்தை முத்தையன் கட்டு இடது கரைப் பாடசாலையும் பெற்றுக் கொண்டன. (08)

# இந்திய பயிற்சியாளர் பதவி போட்டா போட்டி பரிசீலனை

இந்திய கிரிக்கெட் அணிக்கு இதுவரை பயிற்சியாளர் நியமிக்கப்படவில்லை. அவுஸ்திரேலிய முன்னாள் வீரர்களான டீன்ஜோன்ஸ், கிரேக் சேப்பல், டாம்மோடி மற்றும் வட்மோர் ஆகியோர் பயிற்சியாளராக இருக்க விண்ணப்பம் தெரிவித்துள்ளனர்.


இதற்கிடையில் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான ஆலன் போர்டரும் பயிற்சியாளர் பதவிக்கான பரிசீலனையில் இருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.




கிளிநொச்சி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையில் நேற்று முன் தினம் வட்டக்கச்சி ம. வியில் நடைபெற்ற வலைப்பந்தாட்டபோட்டியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி ம. வியின் 17வயது பிரிவு அணி

படம் (12)

## சிந்தனைக்கு



எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 08-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# உதவிகளுக்கு இடையூறு

யுத்தம், ஆழிப்பேரலை இவற்றால் துன்புறும் தமிழ் மக்களுக்கு நாமும் எதுவும் செய்யமாட்டோம், செய்பவர்களையும் விடமாட்டோம் என்பதாகவுள்ளது சிறிலங்கா ஆட்சியாளர்களினதும், அதன் ஆயுதப் படையினரதும் நிலைப்பாடு.

ஆழிப்பேரலை தாக்கி வடக்குக் கிழக்கில் பெரும் அனர்த்தம் ஏற்பட்டபோது துரித கதியில் செயற்பட்டு –அனைவருக்கும் முன்னதாக மக்களுக்கு உதவிக்கரம் நீட்டியது தமிழர் புனர்வாழ்வுக்கழகம். இதன் துரித செயற்பாடு காரணமாக சர்வதேச ஊடகங்கள் மனிதாபிமான அமைப்புக்கள், பொதுஅமைப்புக்கள் மற்றும் நாடுகள் என்பனவற்றின் பாராட்டுதல்களை இவ் அமைப்புப் பெற்றுக்கொண்டது. கொழும்பிற்கு வருகை தந்த ஐ.நா.பொதுச்செயலாளர் கொபிஅனான் கூட த.பு. கழகப் பணிப்பாளரைச் சந்தித்துப் பேசினார்.

ஆனால், இத்தகைய செயற்பாடு சிறிலங்கா ஆட்சியாளர்களுக்குப் பிடித்துக்கொள்ளவில்லை. ஆகையினால், இவ்வமைப்பின் மனிதாபிமானப் பணிகளுக்கு இடையூறு அளிக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களை ஆயுதப்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

இது மாத்திரமன்றி தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் மீது ஆயுதப்படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டனர். சில இடங்களில் தொண்டர்கள் தாக்கப்பட்டனர். பல இடங்களில் தொண்டர்கள் அச்சுறுத்தப்பட்டனர். நிவாரணப் பொருட்கள் பறிக்கப்பட்டன. சேதங்கள் விளைவிக்கப்பட்டன.

இதன் உச்சக்கட்டமாகவே தற்பொழுது தமிழர் புனர்வாழ்வுக் கழக இயக்குநரை சிறிலங்காப் படையினர் கைது செய்தமையும், அவர் பயணம் செய்த வாகனத்தையும், அவர் கொண்டு சென்ற பணத்தையும் தடுத்து வைத்துள்ளமையும் ஆகும்.

அதிகளவு பணம் கொண்டு செல்லப்பட்டமையும், அவர்கள் பயணம் செய்த வாகனத்தின் பதிவு நோயாளர் காவு வண்டியென இருப்பதுமே இத்தடுத்து வைப்பிற்கும், விசாரணைக்கும் காரணம் எனப் பொலிசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், கொண்டு செல்லப்பட்ட பணத்திற்குரிய ஆவணங்கள் உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, வாகனம் [illegible]ர்பாகவும் [illegible]ய பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோதும் பொலிசார் மேற்கொண்ட இந்நடவடிக்கையானது புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்பாடுகளை முடக்கத்திற்குள்ளாக்கும் நோக்கம் கொண்டது என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமில்லை.

இவ்வாறு இல்லாதுவிட்டால், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணமும், அதன் வாகனமும் எந்தப் பொதுச்சட்டத்தின் கீழ் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்ற கேள்வியை மன்னார் மாவட்ட நீதிபதி கேட்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கமாட்டாது. ஏனெனில் வழக்குப்பதிவு செய்யப்படும்போதே எந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை என்பது உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

இது ஒருபுறம் இருக்க தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பாவனையிலுள்ள இத்தகைய வாகனங்கள் முதல் முறையாகத்தான் இராணுவச் சோதனைச்சாவடிகளைக் கடந்து செல்கின்றது என்பதல்ல. ஏற்கனவே பல சோதனைச்சாவடிகளை அவை கடந்து சென்று வந்துள்ளன. இந்நிலையில் தற்பொழுது மட்டும் இத்தகைய நடவடிக்கை ஏன்?

சிறிலங்கா ஆட்சியாளரும் சரி, ஆயுதப்படையினரும் சரி, சேவையாற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வேறு அமைப்புக்களின் செயற்பாடுகளை முடக்குவதில் தீவிர அக்கறை கொண்டவர்களாகவே உள்ளனர். இதற்கு ஒரே காரணம் இவர்கள் தமிழர் தாயகப் பகுதியில் சில அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ளமையே அதாவது தமிழ்மக்கள் நெருக்கடியான வாழ்விலிருந்து விடுபடுதல் கூடாது என்பதே அவர்களின் ஒரே இலக்கு.

இவ்வாறு இல்லாது விட்டால், சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவதற்குத் தயாராக இருக்கின்றோம். பொதுக் கட்டமைப்பை உருவாக்குங்கள் என்ற சர்வதேசத்தின் கோரிக்கையை சிறிலங்கா அரசாங்கம் இதுவரை புறக்கணித்துவருமா? அன்றி பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பவர்களை ஆட்சியாளர்களில் ஒரு பகுதியினர் கண்டிக்கத்தான் முன் வருவார்களா?

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. எதிரிக்குச் சகுனப்பிழையாக வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும். எமக்குக் கிடைக்காது போனாலும் பரவாயில்லை. தமிழர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர். இந்தவகையிலேயே அவர்களின் சிந்தனை, செயல் இரண்டும் உள்ளது. இந்நிலையில் இவர்களுடன் உடன்பாடு காணுதல், இணைந்து வாழ்தல் என்பவை எவ்வாறு சாத்தியமாகும்?

# வரலாற்று நூல்களிலுள்ள தவறுகளைத் திருத்தி உண்மை வரலாற்றை ஆசிரியர் புகட்ட வேண்டும்

## —த.கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன்



இலங்கைத்தீவின் ஆதிக்குடியினர் தமிழர்களே ஆரியர்கள் அல்ல என கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நேற்று தமிழீழ வரலாற்றுத் தேர்வில் சித்தியெய்திய மாணவர்களுக்கு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிறிலங்கா அரசானது தமிழ் பாட நூல்களை பல தவறுகளுடன் அச்சிட்டு தமிழ் மாணவர்களுக்கு அதனை வழங்கி வருகின்றது. இந்நிலையில் உண்மை வரலாறுகளைத் தமிழ் மாணவர்கள் தெரிந்து கொள்ள முடியாத சூழல் தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே தமிழ் மாணவர்களின் நிலையினை கருத்தில் கொண்டு உண்மை வரலாற்றை தமிழ் மாணவர்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் தமிழ் கல்வியாளர்களின் உதவியுடன் தமிழீழக் கல்விக்கழகம் பல வரலாற்று நூல்களை உண்மையான வரலாற்றுடன் அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

சிறிலங்கா அரசு 1970 ஆம் ஆண்டிற்கு முன்னர் எப்படி தமிழ் மாணவர்களைப் புறக்கணித்து செயற்பட்டதோ அதேபோன்று தற்போதும் செயற்பட்டு வருகின்றது.

தமிழ் பாடசாலைகளுக்கென அனுப்பி வைக்கப்படும் புத்தகங்கள் நிறைய எழுத்துப் பிழைகள் உள்ளன. உதாரணமாக 60 பக்கங்களைக் கொண்ட ஒரு வரலாற்று நூலில் 300இற்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகள் உள்ளன.

பிழையான வரலாறுகள் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. மகாவம்சம் கூறுவது போல் இலங்கைத்தீவு ஆரியர்களுக்கு சொந்தமானது அல்ல என்ற உண்மை தமிழ் மாணவர்களுக்கு விளங்கப்படுத்தப்பட வேண்டும். மாணவர்களுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள் வரலாற்றின் உண்மைகளை மாணவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். நூல்களிலே காணப்படும் பிழைகளை மாணவர்களுக்குச் சுட்டிக்காட்டி உண்மைத்தன்மைகளை மாணவர்களுக்கு தெளிவு படுத்த வேண்டும்.

# லெபனான் குண்டு வெடிப்பில் இலங்கைப் பெண் உயிரிழப்பு

லெபனானில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் இலங்கைப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லெபனான் தலைநகரமான பெய்ரூட்டுக்கு வடபுறமாக அமைந்துள்ள கிறிஸ்தவ நகரான லெனாயிலில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வெளிநாட்டு செய்தி ஸ்தாபனமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. கைவிடப்பட்ட வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததன் காரணமாக மேலும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் கைவிடப்பட்ட வீட்டிற்கு அருகில் இருந்த வர்த்தக நிலையங்கள், வீடுகள், தேவாலயம் ஆகியனவும் சேதமடைந்துள்ளதாக லெபனான் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. லெபனானில் இலங்கையர் உட்பட ஆசிய நாட்டைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானவர்கள் சுத்திகரிப்புத் தொழிலும், வீட்டுப்பணியாளர்களாகவும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# மாமனிதர் சிவராமின் படுகொலைக்கு பிரான்சில் கண்டனக் கூட்டம்

கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் அவர்களின் படுகொலையைக் [illegible]டித்து கண்டனக் கூட்டம் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தமிழர் மனித உரிமை மையத்தினாலும், (TCHR) மற்றைய பிரான்சைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடகங்களினாலும் பரிஸில் உள்ள கோவில் மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்துக்கு தமிழர் மனித உரிமை மையத்தின் பிரதிநிதி சக்திவேல் அழகன் தலைமை தாங்கினார்.

மௌன அஞ்சலியை தொடர்ந்து மறைந்த மாமனிதர் சிவராமின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து தீபச்சுடர் ஏற்றியதை தொடர்ந்து கண்டனக் கூட்டம் ஆரம்பமாகியது.

இக் கண்டனக் கூட்டத்திற்கு எல்லைகள் அற்ற பத்திரிகையாளர் சங்க பிரதிநிதிகள் சமூகம் அழிக்க முடியாத காரணத்தினால் ஓர் அனுதாபச் செய்தியை அனுப்பியிருந்தனர்.

இக் கண்டனக் கூட்டத்தில் ஈழநாட்டுப் பத்திரிகையின் ஆசிரியரும் நிர்வாகியுமான சிவகுரு பாலச்சந்திரன், தமிழர் தொலைக்காட்சி இணையத்தின் (ttn) பிரதிநிதி சிறிதரன், ஈழமுரசு பத்திரிகையின் பிரதிநிதி மணிநாகேஷ், பிரான்ஸ் மகளிர் சங்கத் தலைவி திருமதி சுபகுருபரன், தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச் செயலாளர் ச.வி.கிருபாகரன், கவிஞரும் எழுத்தாளருமான அரவிந்தன், கவிஞர் சுபாஷ் அத்துடன் பிரான்ஸ் இடதுசாரி புரட்சிகர கட்சியின் பிரதிநிதி ஜக் கப்பே போன்றோர் மாமனிதர் சிவராமின் படுகொலையைக் கண்டித்து உரையாற்றினர். இக் கண்டன கூட்டத்திற்கு மண்டபம் நிறைந்த பிரான்ஸ் வாழ்தமிழ் மக் கள் கூடி மாமனிதர் சிவராமின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

# இந்.சிறி கூட்டு ஆணைக்குழு மாநாடு ஜூன் மாதம் கொழும்பில்

(கொழும்பு)

ஆறாவது சிறிலங்கா இந்தியக் கூட்டு ஆணைக்குழு மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெற விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டிற்கு சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் ஆகியோர் தலைமை வகிக்க விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு தொடர்பாக சிறிலங்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரனும், இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பலிஹகாரவும் கலந்துரையாடியிருந்தனர்.

இருநாடுகளுக்குமிடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளுதல் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளைப் பேணுதல் தொடர்பாக இந்த மாநாட்டில் ஆராயப்படுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் வழமைபோல் இம்மாதம் பத்தாம் ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணிக்கு செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் தி.இராசநாயகம் கேட்டுள்ளார்.

# சிறுவர் இல்லங்கள் குறித்து யாழ்.நீதிமன்றில் கருத்தரங்கு

சிறுவர் நன்னடத்தை சேவைகள் திணைக்களத்தால் யாழ்.குடா நாட்டில் உள்ள சிறுவர் இல்லங்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று யாழ்.நீதிமன்றத்தில் இடம்பெற்றது. யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி.சிறிநிதிநந்தசேகரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் யாழ்.குடாநாட்டில் உள்ள 70 இற்கும் மேற்பட்ட சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் சிறுவர் உரிமைகள் தொடர்பாகவும் அவர்களின் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இக்கருத்தரங்கில் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவும் கலந்து கொண்டன.

(28,சு)

# பொருளாதாரத் தடைகள் தொடரும் நிலையில் பொதுக்கட்டமைப்புப் பற்றி பேசி என்ன பயன்?

## -கேள்வி எழுப்புகிறார் எழிலன்



(திருகோணமலை)

"திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கட்டடப் பொருட்கள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கு இராணுவத்தினர் தொடர்ந்து தடை விதித்து வருகின்றனர். வடக்கு-கிழக்கில் இவ்வாறான தடை தொடரும் நிலையில் தீர்வு பற்றியும், பொதுக்கட்டமைப்புப் பற்றியும் பேசுவதில் அர்த்தமே இல்லை என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் நேற்றுக் காலை சம்பூர் கிழக்கில் நிகொட் அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்ட கமநல சேவைக் கட்டடத் திறப்பு நிகழ்வில் பங்கு பற்றிப் பேசும்போது தெரிவித்தார்.

"கடல் கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள் நிர்மாணம் செய்வதற்காக பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது பற்றிப் பேசப்படுகின்றது. இதேவேளை, மூதூர் கிழக்குப் பகுதிக்கு மீள் நிர்மாண வேலைகளுக்கு சீமெந்து, கம்பிகள் மற்றும் கட்டடப் பொருட்கள் எடுத்துச் செல்வதற்கு படையினர் தொடர்ந்தும் தடை விதித்து வருகின்றனர். இந்த நிலையில், பொதுக்கட்டமைப்பினால் என்ன நன்மை ஏற்படப் போகின்றது என்றும் எழிலன் அப்போது கேட்டார்.

புதிய கட்டடம் திறக்கப்பட்டது மகிழ்ச்சி தருகின்றது. ஆனால், மூதூர் கிழக்குப் பகுதி மக்கள் தொடர்ந்தும் இராணுவத்தினர் நடைமுறைப்படுத்தி வரும் பொருளாதாரத் தடையினால் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். விவசாயிகள் தங்களின் உழவு இயந்திரங்களுக்குத் தேவையான டீசலை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து எடுத்துச் செல்ல முடியாதுள்ளனர். இது போன்று வேலி அமைப்பதற்கான முட்கம்பியையும் எடுத்துச் செல்லத் தடை.

கடல்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அழிந்து போன வீடுகளை மீள் நிர்மாணிப்பதற்கு சீமெந்து கொண்டு போவதற்குப் படையினர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குத் தடை விதித்துள்ளனர்.

"கடந்த வாரம் இராணுவத்தினர் கொண்டு வந்த இப் பொருளாதாரத் தடை விலக்கப்பட்டுவிட்டதாக ஆளுநர் மறுநாள் அறிவித்தார். ஆனால், இத்தடை மறுநாளிலிருந்து தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என எழிலன் மேலும் தெரிவித்தார். (25)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் மாபெரும் புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினரால் லங்கா புத்தகசாலையினரின் அனுசரணையுடன் மாபெரும் புத்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பமாகியுள்ளது. சகல மாணவர்களுக்கும் பயன் தரும் பாடநூல்கள் பயிற்சி நூல்கள் உசாத்துணை நூல்கள், பல்கலைக்கழக சகலதுறை சார்ந்த மாணவர்களுக்கான நூல்கள், சிறுவர்களுக்கான நூல்கள், கலைக் களஞ்சியங்கள் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் நாவல்கள், கவிதைகள், சிறுகதைத் தொகுப்புக்கள், சமய இலக்கியங்கள் கல்வித் திணைக்கள வெளியீடுகள், கடந்த கால பரீட்சை வினா விடைகள், பிறநாட்டு ஆங்கில இலக்கியங்கள்,நாவல்கள், மருத்துவ நூல்கள எனப் பல பலன் தரும் நூல்களும காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (சு)

# பொதுநோக்கு மண்டபம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தேறாங்கண்டல் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணியினரால் ஒழுங்குபடுத்தப்பட்டு உலக வங்கி நிதியுதவியுடன் நியாப் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டு நேற்றுக் காலை பத்து மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேறாங்கண்டல் அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மண்டபத்தின் பெயர்ப்பலகையினை முல்லை மாவட்டப் ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் வை. குமரன் திரை நீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து புதிய கட்டடத்தை துணுக்காய்ப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிகரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். கிராமத்தின் முதல் மாவீரன் கப்டன் அறிவு அவர்களின் திருவுருவப் படத்திற்கு ஈகச் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை, ஆசியுரை, சிறப்புரைகள் என்பன இடம் பெற்றன. உரைகளைத் தொடர்ந்து கலைமகள் சிறுவர் போசாக்கு நிலைய சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (தீ)

# புலிகளின் விமானங்கள் குறித்து இந்தியா கவனம் செலுத்தி வருகிறது!

## –இந். வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்

தமிழீழ விடுதலைப்புலிகள் விமான ஓடுபாதை அமைத்துள்ளமை தொடர்பாகவும், அவர்கள் விமானங்கள் வைத்திருப்பது தொடர்பாகவும் வெளிவரும் செய்திகள் குறித்து இந்தியா கவனம் செலுத்தி வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மேலும் விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளனர் எனத் தெரிய வருவதாகவும் இந்து நாளிதழுக்கு அளித்த பேட்டியில் வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் விமான ஓடுபாதை அமைத்துள்ளமை குறித்தும், அவர்களிடம் இரு விமானங்கள் இருப்பது குறித்தும் இந்தியா கவனம் செலுத்தி வருகிறது. அவர்களுக்கு மேலும் விமானங்கள் வரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன எனத் தெரிவித்த அமைச்சர் அதுபற்றி மேலதிக தகவல்களை வெளியிடவில்லை. அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை அமுலில் இருக்கையில் விடுதலைப்புலிகள் வான்படையை நிறுவுவதகாக் குறித்து சிறிலங்கா அரசாங்கம் தனது அண்டை நாடுகளுக்குத் தெரிவித்திருந்தது. விடுதலைப் புலிகள் இரணைமடுப்பகுதியில் விமான ஓடுபாதை அமைத்துள்ளதாகவும், அவர்களிடம் இரண்டு விமானங்கள் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருப்பதாகவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

## –டெங்கு நுளம்பு பெருக்கம் –

# கொழும்பில் துப்புரவு செய்யப்படாத காணி உரிமையாளருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

கொழும்பு நகரத்தில் துப்புரவு செய்யப்படாத காரணங்களினால் டெங்கு நோய் பரவி வருவதாக 300 காணி உரிமையாளருக்கு எதிராக கொழும்பு மாநகரசபை வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இக் காணி உரிமையாளர்களில் சிலர் வெளிநாடுகளில் வசித்து வருகின்றார்கள். ஏனையவர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் வசித்து வருகின்றார்கள். இவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கொழும்பு மாநகர சபை தீர்மா[illegible]துள்ளது.

---

### மாணவக்....

குழுவொன்று மற்றைய மாணவர் குழுவைத் தாக்கியுள்ளது. இந்தத் தாக்குதலை நடத்த வந்ததாகக் கூறப்படும் குழுவைச் சேர்ந்த ஒரு மாணவனை கிரிபத்கொடைப் பொலிசார் கைது செய்துள்ளனர். ஏனைய இரு மாணவர்கள் இதன்போது தப்பியோடியுள்ளனர். இரு மாணவக்குழுக்களுக்கும் இடையே நீண்டகாலமாக விரோதம் நிலவிவந்துள்ளது. இந்த சம்பவத்திற்குப் பின்னர் அன்றைய தினம் மாலை முதல் களனி பல்கலைக்கழகத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

### எனது....

குறித்த தமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே தெரிவித்துள்ளது. சமாதான முயற்சியில் ஒரு பகுதியாக தற்போது கலந்துரையாடப்பட்டுவரும் பொதுக்கட்டமைப்பு தொடர்பான நிலைப்பாட்டை தனது கட்சி பொதுக்கட்டமைப்பை அரசாங்கம் ஏற்படுத்த அனுமதியளித்ததன் பின்னர் வெளிப்படுத்தும் என்றும், அது தொடர்பாக கலந்துரையாட தற்போதைக்கு ஒன்றும் இல்லையென்றும் அவர் அதை நிராகரித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க எழுதிய கடிதத்திற்குப் பதில் எழுதும் வகையிலேயே சனாதிபதி மீண்டும் நேற்று ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கடிதம் எழுதியுள்ளார்.

### மி.சபை....

மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பின் போது அமைச்சரவை அங்கீகாரமளித்த அறிக்கையை வாபஸ் பெறுவதாக எழுத்து மூலம் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இது சம்பந்தமான அறிவித்தலில் நிதியமைச்சர் சரத் அமுனுகமவும், மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவும் அமைச்சின் செயலாளர்களும் கைச்சாத்திட்டுள்ளனர். சிறிலங்கா மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கு புதிய யோசனையை தயாரிப்பதெனவும் இது சம்பந்தமான செயற்பாடுகளில் மின்சாரசபை தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலை 11 மணிமுதல் பிற்பகல் இரண்டு மணிவரை இச்சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பு சுமுகமாக நடைபெற்றதையடுத்து மின்சார சபை ஊழியர்கள் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்கப் போராட்டத்தைக் கைவிட்டனர். அத்துடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் முன்னெடுக்கப்படவிருந்த தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தையும் கைவிட்டுள்ளனர்.

### ஹெரோயின்...

எடுத்துச் சென்றுள்ளனர். இதைப் பரிசீலனை செய்த சிறைச்சாலை அதிகாரிகள் குருநாகல் பொலிசாரை வரவழைத்து திண்பண்டங்களையும், பற்பசையையும் பரிசீலனை செய்யும்படி கேட்டுக் கொண்டனர். பரிசீலனையின் பின் பற்பசையில் 20 பைக்கட் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பின் குருநாகல் பொலிசார் இவரை கைது செய்து விசாரணைககாக அழைத்துச் சென்றுள்ளனர்.

### சனாதிபதியின்...

மீளக்கட்டியெழுப்ப ஒரு பில்லியன் டொலர்கள் தேவையாக உள்ளது. ஆனால் கொழும்பு அரசு அழிவேற்பட்டு நான்கு மாதங்களின் பின்னரும் தொடர்ந்து அக்கறையின்றி உள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கை தமிழ்மக்களிற்கு இயல்பு நிலையைத் தோற்றுவிக்குமென நம்பப்பட்டது. ஆனால் எல்லா வாக்குறுதிகளும் காற்றில் பறக்கவிடப்பட்டு, தமிழ்புத்தி ஜீவிகள், பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டு போர் நிறுத்த உடன்படிக்கை சமாதான முன்னெடுப்புக்கள் மீது மிகப்பெரியளவில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும் பேச்சின் மூலமான தீர்விற்கான எமது பொறுப்புக்கள் தொடரும் தமிழ் மக்கள் கொழும்பினால் ஆயுதங்களைத் தூக்கச் சொல்லப்படுகிறார்களா? இல்லையா என்பது கேள்வியாக உள்ளது. இது கொழும்பு தீர்மானிக்க வேண்டியது.

தாய்நாட்டிற்கான போரில் 2002 போர் நிறுத்த உடன்படிக்கை வரை கிட்டத்தட்ட 64000 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி உரிமைக் கோரிக்கை மூலம் இருபக்கப் பிரச்சினைகளினால் சமாதானப் பேச்சுக்கள் கிட்டத்தட்ட இரு வருடங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பெரிய இயற்கை அழிவால் கிட்டத்தட்ட 40 ஆயிரம் மக்கள் இறந்ததுடன் ஐந்து இலட்சம் பேர் வீடுகளை இழந்தும் உள்ளனர்.

அரசாங்கம் [illegible]ழ் மக்கள் மீதான அண்மைக்கால[illegible] கொலைகளிற்கு புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறியோர் மீது குற்றம் சுமத்துகிறது. தமிழ்மக்களும், விடுதலைப் புலிகளும் சனாதிபதியின் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான நோக்கத்தின் நேர்மைத் தனத்தில் பலத்த சந்தேகம் கொண்டுள்ளோம். சனாதிபதியின் நடவடிக்கையில் நாம் இப்பொழுது எதைக் காண்கின்றோம். அவர் மிகவும், அவதானமாக சர்வதேச சமூகத்தைக் கவர்ந்து தமது பணப் பெட்டியை நிரப்புவதிலேயே ஆர்வமாகவுள்ளார் என்றார்.

### பொதுக்....

முக்கிய உறுப்பினர்கள் ஏற்கனவே இவ்வாறான நடவடிக்கை சம்பந்தமாக உத்தியோகப்பற்றற்ற முறையில் இணக்கத்தை வெளிப்படுத்தியிருப்பதுடன், கடந்த வாரத்தில் முக்கிய அரசியல் கட்சிகளுக்கும் அதுபற்றி அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் இவ்வட்டாரங்களில் இருந்து மேலும் அறிய வருகின்றது.

தாங்கள் முன்வைத்த யோசனைக்கு அமைய அரசாங்கம் இந்தப பொதுக்கட்டமைப்பை நிறுவாது விட்டாலும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களை மறந்துவிட முடியாது என்பதால் உதவி வழங்கும் நாடுகளும், அமைப்புக்களும் இத்தீர்மானத்திற்கு வந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக வங்கியினாலும், உதவி வழங்கும் அமைப்புகளினாலும் ஆழிப்பேரலையினால் இலங்கைக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அதற்கமைய உதவித்தொகையில் வடக்கு கிழக்கிற்கு 60 வீதத்தையும், தெற்கிற்கு 40 வீதத்தையும் வழங்க உதவி வழங்கும் நாடுகளும், அமைப்புக்களும் தீர்மானித்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பு நிறுவப்படாது விடின் வடக்கு கிழக்கிற்கான உதவித் தொகையினை நேரடியாக விடுதலைப்புலிகளிடம் கையளிப்பதா அல்லது அங்கு இயங்கும் அரசசார்ப்பற்ற நிறுவனங்களிடம் கையளிப்பதா என்பது குறித்து உதவி வழங்குநர்கள் இதுவரை இறுதித் தீர்மானத்திற்கு வரவில்லை எனவும் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது